www.tamilarangam.net





இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - நவம்பர் 99 -30/-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.

குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும் பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.



*ஷமீலா செனவிரத்ன*
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்* Shell GAS

www.tamilarangam.net


அமுது

# அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . 2
கண்ணீர் வடிக்கும் முதலைகள் . . . . 5
**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . 6
**அரசியல் அரங்கம்:**
இந்திய அரசியலை நம்பி . . . . . . . . 8
**பேட்டி: லக்ஷ்மன் ஜெயக்கொடி**
தொல்லை தவிர்ப்புக் குழுவும்
தமிழர்களும் . . . . . . . . . . . . . . . 12
பாகிஸ்தான் இராணுவப் புரட்சி... . . . . 15
**கவிதை:** அசரீரி, மரணப் பிரகடனம் . . 16
வெண் பிரம்பு.. . . . . . . . . . . . . . 17
**சிறுகதை:**
புத்திஜீவிகள் . . . . . . . . . . . . . . 18
இயற்கை தந்த ஜில் . . . . . . . . . . . 20
ஒரு கவிதையும் சில ஈசல்களும் . . . . 22
**கவிதை:** நீங்கள் தூவிய மலர்கள் . . 25
**சிறுகதை:**
மௌன யுத்தம் . . . . . . . . . . . . . 26
மனசு . . . . . . . . . . . . . . . . . . 28
**புரட்சி:**
ஜேர்மன் வெறி உருவாக்கிய . . . . . 30
ஜிம்னாஸிய விந்தை... . . . . . . . . . 33
லொட்ஜ் வாழ்க்கை... . . . . . . . . . 35
**கிரிக்கட்:**
'சனத்'தின் வருகைக்குப் பின் . . . . . 38
**நோயற்ற:** ஊசி இல்லாமலே. . . . . . . 41
**குங்ஃபூ:**
வின் சுன் குங் ஃபூ . . . . . . . . . . . 42
**சினிமா:**
சினிமாவில் நகைச்சுவை . . . . . . . . 44
கிரக சஞ்சாரம் . . . . . . . . . . . . . 47
நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . 48


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283, 421181 Ext 347**
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருந்திய ஒரு வடிவம் நோக்கி தன்னை செதுக்கும் "அமுது"



அமுதுக் குழந்தை ஓராண்டைப் பூர்த்தி செய்வதையிட்டு மனம் புளகாங்கிதம் கொள்ளுகிறது. உள்ளதை உள்ளபடி நீதி தளும்பாமல் நேர்மை என்னும் மகுடம் தாங்கி வாசகர் உள்ளங்களை காந்தம் போல் கவர்கின்றாய். நல் வாழ்த்துக்கள்.

**நாக. மகேந்திரலிங்கம்**
**யாழ் - சங்கானை.**

அறிவைத் தேடித் திரிந்தேன்
முத்தாய் நீ மிளிர்ந்தாய்
உதயம் சுமந்து வந்து தர்மத்தை காண்பித்தாய்
ஹம்.. ம்... என்று நீ மொழிந்தாலே - இளைய
உள்ளங்களுக்கு இதமே.... இதமே... இதமே....!

இன்னும் பல வருடங்களைக் கடக்க வேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான புதுமையான வித்தியாசமான விடயங்களையும், தொழில்நுட்ப - பொது அறிவு விடயங்களையும் சேர்த்துக் கொண்டால் சிறப்பாய் அமைவாய்.

**எச். எம். ஜனுல் ஹக்**
**நேகம.**

அமுது அட்டைப் படத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. மாதம் ஒரு முறை கண்களைக் கவரக் கூடிய சிறந்த அட்டைப்படங்கள். சிறுகதைகளும், கவிதைகளும் சுமாராக இருந்தன.

**வேலாயுதன் கௌவல்யா**
**குண்டசாலை.**

பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்து வாழும் மக்களில் நானும் ஒருவன். அமுது சஞ்சிகையை இதற்கு முன் இரண்டு இதழ்கள் வாங்கிப் படித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தமிழர் படும் வேதனையை வெளிப்படுத்தும் தங்களுக்கு எனது நன்றியை தெரிவிக்கிறேன். அனைத்து அடக்கு முறைகளையும் அன்னை மண்ணிலே உடைத்தெறிவோம்.

அமுது செப்டெம்பர் இதழ் அனைத்து அம்சங்களும் Very Superb. யாழ். பல்கலைக்கழக கல்விமான்கள் இந்திய இராணுவ அதிகாரிகளின் தயவை நாடி நின்ற வேளையில் அவர்கள் போல் அல்லாமல், மாணவர்களுக்காகவும், மக்களுக்காகவும் சேவையாற்றிய ராஜினியைப் பற்றி அறியத் தந்தமைக்கு நன்றிகள். புரூஸ்லீ பற்றி எழுதியது எமக்குப் பல தகவல்களைத் தந்தது.

**அனுரதீபக், தியசிரிகம.**

அமுதின் ஒரு வருட சாதனை என்ன? தமிழில் எழுதுகிறவர்களெல்லாம் இதுவரை அரசைக் கண்டிப்பார்கள், இதர தமிழ்க் கட்சிகளை விமர்சிப்பார்கள், தமிழ் மக்களின் துன்பங்களுக்கு வேறு யாருமே காரணமில்லை என்பது போல நீலிக் கண்ணீர் வடிப்பார்கள்.... புலிகள் விடும் தவறையும் அரசுக்கு சமாந்தரமாய் சுட்டிக்காட்டி எழுதுவதை ஆரம்பித்திருப்பது அமுதுதான். பாராட்டுக்கள்.

**எஸ். காந்தருபன், கொழும்பு 06.**

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நான்கும் கலந்து உனக்கு நான் தருகிறேன். அமுதே, நீ எங்களுக்கு எல்லாவிதமான சுவைகளையும் கொண்ட அறிவுப் பெட்டகத்தை மாதந்தோறும் மறந்திடாமல் வழங்கிட வேண்டும். ஒரு வயது முடிந்து ஒய்யாரமாக இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அமுதின் அனைத்து அம்சங்களும் அருமை, அட்டகாசம்தான். வளர்க மென்மேலும். வண்ணப் புகைப்படங்கள் கண்களில் ஒற்றிக் கொள்ளும் வகையில் அற்புதமானவை.

**பாலா சங்குப்பிள்ளை**
**அட்டன்.**

அமுது கிடைத்தது. உண்மையில் அமுது என்ற பெயர் மிகப் பொருத்தம். கதைகளும், ஆக்கங்களும் மிகத் தரமானவை. தொடர்ந்து அமுது என் கரம் எட்டுவதற்கான வழிமுறைகளை எனக்கு அறியத்தரவும். எனது பிரதேசத்திற்கு கடித மூலம்



தான் இதனை நீங்கள் அனுப்ப முடியும். இவ்வாறான புத்தகங்கள் இங்கு கிடைப்பதில்லை. வருட சந்தா எவ்வளவு, எப்படித் தொடர்பு கொள்வது என்பவற்றை விபரமாக அறியத் தரவும்.

**கலைமகள் வித்தியாலயம்,**
**முள்ளியவளை.**

கியூபப் புரட்சி பற்றிய தொடர் நன்றாக இருக்கிறது. படங்கள் எங்கேயிருந்து எடுக்கிறீர்கள்? அட்டகாசம்! இந்த நூற்றாண்டுப் புரட்சிகளில் எங்களுடைய நாட்டுப் போராட்டம் பற்றி எப்போது எழுதப் போகிறீர்கள்? துணிவாரா புரட்சிதாஸ்?

**பா. கிருஷ்ணன்**
**பளை.**

அமுதக் கடலில், அமுத வாசல், அரசியல் அரங்கம், பேட்டி, கவிதை, சிறுகதை, விளையாட்டு, புரட்சி, சினிமா போன்ற தலைப்புக்களில் அமுதில் வெளிவருவன பாராட்டுதற்குரியவையாக அமைந்திருக்கின்றன. மீண்டும் மீண்டும் புதுப்புதுப் பொலிவுடன் பொது அறிவும், புதிய ஆக்கங்களும் இணைந்து அமுது வெளிவர வேண்டும் என்பது எனது அவா.

**சு. சுந்தரேசன், கொக்குவில்.**

புரட்டாதி மாதம் வெளியாகிய அமுதில் பல முக்கியமான தகவல்களை சேர்த்திருந்தீர்கள். மௌனமாக்கப்பட்ட புயல் ராஜினி, சர்ச்சைக்குரிய UTHR (J) பேட்டி மூலம் பல உண்மைத் தகவல்களை அறிந்து கொண்டேன். இப்படியான பல கட்டுரைகளைத் தொடர்ந்தும் தர வேண்டும்.

எல்லாப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் ஆரம்பத்தில் தரமாகவும் நடுநிலையாகவும் எழுதுகின்றன. ஆனால் காலம் கடந்து செல்லும்போது பக்கச் சார்பாக எழுத முற்படுகின்றன. இதே போன்று அமுதுவும் காலப்போக்கில் மாற்றம் அடையாமல் தொடர்ந்தும் நடுநிலைமையாக பல விடயங்களை ஆணித்தரமாக எழுத வேண்டும். துளி 11, துளி 12 ஆகியவற்றின் அட்டைப் படங்கள் மிகவும் நன்றாக இருந்தன.

**லோ. நிமலன்**
**யாழ்ப்பாணம்.**

இதழின் நடுப்பக்க (வீண்) ஒளிப்படம் ஆபாச சஞ்சாரத்துக்கு மெல்ல இழுக்கிறது. 45ஆம் 46ஆம் பக்க முண்டங்களும் அதைக் கோடிகாட்டி நிற்கின்றன. எதிர்கால இதழ்களில் மென்மேலும் விரசமாக, ஆபாசமாக "கவர்ச்சியாக" சரக்குகள் வரப்போகின்றன என்பதற்கு இவை யாவும் அறிகுறிகள் போன்று தென்படுகின்றன.
"பிரான்ஸ் - சுகன்" கூறியுள்ளது போன்று எமது பத்திரிகைக் கடைகளிலும் அமுதுக்கு நல்ல மவுசு இருக்கின்றது. பிரதியை முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டிய நிலையைக் காண முடிகின்றது. ஆபாசம் தலைதூக்கினால் "ஆபாச வாசகர்" ஒரு சிலர் அதிகரிப்பார்கள். கலை, இலக்கிய, அறிவியல், பொழுதுபோக்கு வாசகர்கள் படிப்படியாக குறைந்து விடுவார்கள். அந்த நிலை அமுதுக்கு வேண்டாம். நீண்ட காலத்தின் பின்னர் நம்நாட்டில் தமிழில் வெளிவருகின்ற தரமான சஞ்சிகை இது. தொடர்ந்தும் தனது தரத்தைப் பேணி வெளிவர வேண்டும்.
அமுதின் சமுதாயப் பணி - சமூகப் பணி தொடர வேண்டும் என வேண்டி நிற்கிறேன்.

**யாக்கூத்**
**மட்டக்குளி.**

அமுது துளி 12 பார்த்தேன். திருந்திய ஒரு வடிவம் நோக்கி "அமுது" தன்னைச் செதுக்கிக் கொண்டே செல்கிறது. உள்ளே விடயதானங்களில் வித்தியாசம் தெரிகிறது.
சிந்திக்க - "பிக்பொக்கட்", "காலத்தைக் கைப்பற்ற"
ரசிக்க - டாவின்சியின் ஓவியங்கள்
அறிய - UTHR (J), கோழிச் சண்டை
வருந்த - ராஜினி
- வீண் வர்ணப் பிரயோகங்களை குறையுங்கள் (உ-ம்: முகங்கள், நக்கீரன், வெடிதலைகீதம்)
- படங்களுக்கு கவிதைகளின் கனதி போதாது

**எஸ். நளீம்**
**மீராவோடை - 05, வாழைச்சேனை.**

முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது தமிழர்கள் மௌனம் சாதித்தார்கள் என்றால் அதில் நியாயமும் இருக்கும். ஏனெனில் தமிழைப் பேசினாலும் முஸ்லிம்கள் தமிழர்களிடமிருந்து வேறுபட்டே இருக்க விரும்பினார்கள். தற்போது வேண்டுமானால் (ஒரு சில நிகழ்வுகளை வைத்து) பலரும் பலதை சொல்லலாம். அமுது கட்டுரை கூட முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டிக்க வேண்டும் என்று எழுதப்பட்டதே தவிர கட்டுரையில் இரு தரப்பினதும் செயற்பாடுகளின் சரி, பிழை ஆராயப்படவில்லை.

**"மலையகத்தம்பி" மு. கருணாகரன்**
**எட்டியாந்தோட்டை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

பிரதமஆசிரியர்:
**எஸ். மனோரஞ்சன்**
இணையாசிரியர்:
**து. பாஸ்கரன்**
ஆசிரிய பீட ஆலோசகர்:
**டி. பீ. எஸ். ஜெயராஜ்**
கட்டுரையாசிரியர்:
**சி. சிவகுமார்**

ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
**எம். எச். எம். ஷம்ஸ்**
**எம். எஸ். எம். ஹிஷாம்**

பிரதம வடிவமைப்பாளர்:
**சி. முரளிதரன்**
ஓவியர், கார்டூனிஸ்ட்:
**இ. ப்ரகீத்**
பக்க வடிவமைப்பு (கணனி):
**ஜெரால்ட் எஸ். நடேசன்**
எழுத்தமைப்பு (கணனி):
**எஸ். எம். பிரேம்குமார்**

விளம்பர முகாமையாளர்:
**வருண மல்லவஆராச்சி**
தயாரிப்பு முகாமையாளர்:
**அடய அமரதாஸ**
அச்சமைப்பு முகாமையாளர்:
**ந. சற்குணநாதன்**
விற்பனை முகாமையாளர்:
**அனுர அபேரத்ன**

அச்சிட்டு வெளியிடுவோர்:
**அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஓ◌ஃப் சிலோன் லிமிடெட்**
**இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.**

Chief Editor:
**S. Manoranjan**
Associate Editor:
**T. Baskaran**
Editorial Consultant:
**D. B. S. Jeyaraj**
Features Editor:
**S. Sivakumar**

Other Editorial Staff:
**M.H.M. Shums**
**M.S.M. Hisam**

Chief Designer:
**C. Muralitharan**
Computer Graphic Artist/Cartoonist:
**P.R.B.Ekkneligoda**
Computer Page make-up:
**Gerald S. Nadesan**
Computer Typeset:
**S. M. Premkumar**

# நல்லதோர் வீணை செய்தே...



வளர்ச்சி!
இது எம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சொல். எல்லாமே வளர்வன. ஏன், நாமே வளர்கிறோம். எம்மைச் சூழவுள்ள யாவும் வளர்கின்றன. எம் அறிவு, சிந்தனை, அனுபவம் வளர்கிறது. அடுத்தவர் வளர்ச்சி எமக்குத் தெரிகிறது. மொத்த சமூகமுமே வளர்கிறது. வாழ்க்கை வசதிகள், தொழில்நுட்பம், நாகரீகம், விஞ்ஞானம்... யாவுமே வளர்கின்றன. வளர்ச்சியென்பது எம்மோடு கலந்திருக்கும் ஒரு நியதி.
எம் எல்லாவகை எத்தனங்களும் அதற்கானதே!
ஆனால் வளர்ச்சிப் போக்கென்பதை நாம் ஒருதிசைப்பட்டதாகவே பொதுவில் கருதுகிறோம். அத்தோடு அதை ஒன்றின்பாலானதாக மட்டுமே எடுத்துக் கொள்கிறோம். உண்மையில் அது பன்முகப்பட்டது. பலவற்றைச் சார்ந்தது. எமது வளர்ச்சி எப்போதும் மற்றையதைச் சார்ந்தே நிற்கிறது. எனவே மற்றையவற்றோடு ஒப்பிட்டே எம் வளர்ச்சியை நாம் காணமுடியும். ஒப்பீடே வளர்ச்சியின் அளவுகோல். வளர்ச்சியின் நன்மை தீமை இங்குதான் கணிப்பிடப் படுகிறது. ஒன்றின் வளர்ச்சி மற்றையதில் தங்கி நிற்கும்போது அது தன்னையறியாமலே மற்றையதன் வளர்ச்சியைப் போஷிக்கிறது. தனது வளர்ச்சியோடு தன்னைச் சூழவுள்ளவற்றின் வளர்ச்சியைப் போஷிக்கும் பொழுதுதான் தனது வளர்ச்சி அர்த்தமுள்ளதாகின்றது.
தன்னைச் சூழவுள்ள எல்லாவற்றையும் சிதைத்து அவற்றின் வளர்ச்சிக்கான எல்லா இடைவெளிகளையும் அடைத்துவிட்டு ஒரு வெட்டவெளியில் தனித்து நின்று தனது வளர்ச்சியே உண்மையான வளர்ச்சியென வரைவிலக்கணப் படுத்தும்போது அதன் அர்த்தமே தலைகீழாகிவிடுகிறது. ஒரு பக்குவப்பட்ட வளர்ச்சியின் அர்த்தமுள்ள ஆழ அகலங்களை உணர மறுக்கும்பொழுது, எம் சிந்தனையானது தன்னலவயப்பட்ட எண்ணத்தினால் வழிநடத்தப்பட்டு, சிதைந்த- பரிணாமமிழந்த ஒரு விகாரத் தன்மையையே வளர்ச்சியென்று எம்மை நம்பவைக்கிறது.
இதனால்தான் கல்வியில் வளர்ந்த பலரிடமும் மனசாட்சி வளர்வதில்லை. அதிசிறந்த நிபுணரிடமும் கருணை இருப்பதில்லை. ஆற்றல்மிக்க மனிதர்களிடமும் நேர்மை இருப்பதில்லை. உயர்வான சமூகங்களிலும் குரூரமும் வன்முறையும் நிராகரிக்கப் படுவதில்லை.
ஒரு கோட்டை உயர்ந்ததாகக் காட்ட வேண்டுமென்பதற்காக அதன் அருகிலிருக்கும் கோட்டைப் பாதி அழித்துவிட முனைவதுபோல் தன்னை உயர்ந்தவனாகக் காட்டுவதற்காக அருகிலிருப்பவனின் கால்களைத் தறித்து விடுவதையே நம் வளர்ச்சிச் சித்தாந்தமாகக் கொள்ளலாமா?

ஆ-ர்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075-331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK
பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லிமிட்டட்

*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு -3 பிரதான நகர்க் கிளை தொலைபேசி : 565220-3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411-16

NETWORK


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# கண்ணீர் சிந்தும் தண்ணீர் ராஜாக்கள்

அண்மையில் கொழும்பில் கொள்ளுப்பிட்டிக் கடற்கரையில் அப்பிரதேசத்து மக்களை முதலையொன்று ஒரு கலக்குக் கலக்கியது. அதை வன விலங்குகள் திணைக்களம் வலைவிரித்துத் தேடியலைந்தது. இறுதியில் ரத்மலானையில் மீனவர்களின் வலைக்குள் அகப்பட்டதாக ஒரு பரபரப்பான செய்தி கிடைத்தது. கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அம்முதலையை மிருகக் காட்சிச்சாலைக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு.... ஊர்வனவற்றில் பெரியதும், பயங்கரமானதுமென வர்ணிக்கப்படுவவை முதலைகள். தண்ணீருக்குள் இறங்க முற்படும் எமக்கு "முதலை, முதலை" என்று பயங்காட்டினாலே தலைதெறிக்க ஓடுவோம். ஏனென்றால் முதலை முழு மனிதனையே விழுங்கிவிடுகிறது. அதன் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வது அபூர்வம்.

ஆனால் நாம் நினைப்பது போல எல்லா முதலைகளும் மனித மாமிசம் விரும்புவதில்லை. ஓரிரு வகைகளே மனித மாமிச விரும்பிகள். இவை முள் முதலைகள் எனப்படுகின்றன. இதன் தோல் முள் முகடுகளால் ஆனது.

அருகிச் செல்லும் இனங்களில் முதலையும் ஒன்றென்று சூழலியலாளர்கள் கூறுகின்றனர். முதலையின் தோல் அதிக விலைக்கு விற்கப்படுவதாலும், அவற்றின் வாழ்விடங்களில் மனிதன் குடியிருப்பு அதிகரித்திருப்பதனாலும், நீர் வாழ் சிறிய உயிரினங்கள் அழிவதால் ஏற்படும் உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் முதலைகள் பெருமளவில் அழிந்து வருகின்றன.

மனிதர்களுக்கு முதலை என்றதும் ஏற்படும் பயத்தினாலோ என்னவோ முதலைகளைக் கொன்றே வருகின்றனர். இப்படியே சென்றால் முதலைகள் புத்தகங்களில் மட்டுமே மிஞ்சியிருக்கும் நிலை ஏற்படும்.

இந்தியாவில் ஆண்டுக்கு 2000 பேர் வரை முதலைக்குப் பலியாகிறார்கள். ஆனாலும் அங்கு முதலைகளைப் பாதுகாக்கவென்று 1976இல் 25 முதலைகளோடு பண்ணையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இது இன்று **முதலை வங்கி** என்று பெயர் பெற்றுள்ளதோடு ஆயிரம் முதலைகளைப் பராமரித்தும் வருகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, பிரித்தானியப் படையினரால் கைது செய்யப்பட்ட ஜப்பானியப் படையினர் 1000 பேரை தப்பிப் போகாவண்ணம் 'பெங்காளபொக்க' என்ற சேற்று நிலமொன்றுக்குள் கைது செய்து வைத்திருந்தனர்.

அடுத்த நாள் கைதிகளைப் பார்க்கச் சென்றபோது அதில் 980 பேரை முதலைகள் விழுங்கிவிட்டு ஏப்பமிட்டுக்கொண்டிருந்தன. இந்த மகா பயங்கர விளைவின் பிறகு முதலை பற்றிய பீதியும் மிக அதிகமாகியது.

அதுமட்டுமல்ல சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் பாடி முதலையுண்ட சிறுவனை மீட்டதாக பழங்கதைகளிலும் கிலியூட்டும் பிராணியாக இடம் பிடித்திருக்கிறது.

முதலைகள் மண்ணைக் கிண்டி முட்டையிட்டு மூடி விடும். குட்டிகள் வெளியே வருவதற்கு ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன் வித்தியாசமான ஒரு சத்தத்தைப் போடும். உடனே தாய் முதலையோ தந்தை முதலையோ ஓடி வந்து முட்டை ஓட்டில் தட்டி உடைத்து குட்டி வெளிவர உதவும். 60 நாட்கள் வரை முட்டைக்குள்ளிருந்து உலகுக்கு தலைகாட்டும் முதலைக் குட்டிகளுக்கு முதல் முத்தம் கொடுத்து தாய் வரவேற்கும்.

அதன்பின் நீருக்குள் செல்லும் முதலைக் குட்டிகள் உயிர்ப் போராட்டம் நடத்தியே தப்பிப் பிழைக்கும். பெரிய மீன்களும், ஏனைய நீர் வாழ் உயிரினங்களும் அவற்றை தம் உணவாக்கிக் கொள்கின்றன. 100 முதலைக் குட்டிகளில் ஒரு முதலையே பெரிதாக வளரும் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எந்நேரமும் முதலையின் கண்ணிலிருந்து கண்ணீர் வடிவது போன்று இருக்கும். இப்படி அழுவது போல நடிப்பவர்களைத்தான் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்று கூறுகிறோம்.

மிகத் துல்லியமாகவும் வேகமாகவும் வேட்டையாடக் கூடிய ஊர்வன விலங்கு என பெயர் பெற்றவை முதலைகள். வாய்க்குள் ஒரு இரை அகப்பட்டால் அதன் 70 பற்களுக்குள்ளும் மிக இறுக்கமாக மூச்சுப் போகும்வரை இறுக்கிக் கொள்ளும். பிறகு இரையை அதன் பொந்துக்குள் வைத்து ஆற அமர இருந்து சுவைக்கும்

10 முதல் 15 அடி வரையில் நீளமுடைய முதலைகள் 50 - 60 வருடங்கள் மட்டுமே உயிர்வாழும்.

**- எச். எஸ். டீன்**



www.tamilarangam.net



# சமவாய்ப்பு என்றதும் பீதியுறும் மனநோய்

நக்கீரன்

சமத்துவம், சகோதரத்துவம், சமவாய்ப்பு என்ற சொற்பதங்களைக் கேட்டாலே கெட்ட கனா கண்டது போல் அலறுவது எமது நாட்டில் ஒரு பண்பாடாகவே வளர்ந்து விட்டது. அது எமது நாட்டில் சகல தரப்பினரிடையேயும் ஒரு தொற்று நோய் போல் பரவியிருந்து இந்த தேசத்தின் எதிர்காலத்தையே குழி தோண்டிப் புதைத்து விடுமளவுக்குப் பூதாகரமாக விரவி நிற்கிறது.

கடந்த மாதம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் "சமவாய்ப்புச் சட்டமூலத்திற்கான" அறிக்கையை சமர்ப்பிக்கப் போகின்றது என்ற செய்தி வெளிவந்தவுடனேயே குய்யோ முறையோ என எல்லாத் திக்குகளிலுமிருந்து காட்டுக் கத்தல்கள் கேட்கத் தொடங்கி விட்டன. ஏதோ மற்றவர்களுக்கு சம வாய்ப்பு வழங்குவதென்பது தமது வாய்ப்புகளைக் கெடுத்துவிடும், தாம் அழிந்துபோய் விடுவோம் என்கின்ற அடிப்படையிலேயே இவர்கள் கூக்குரலிட ஆரம்பித்தனர்.

சட்டமூலத்தைக் கொண்டுவர முயற்சி செய்த பொ.ஐ.மு. அரசிற்குள்ளேயே அதற்கிருந்த எதிர்ப்பைக் கண்ட போதுதான் இந் நாட்டின் அரசியல் சமத்துவம் பற்றிய பிரச்சினையால் வெடித்திருக்கும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வருமா என்ற சந்தேகமே எழுகின்றது.

இந் நாட்டின் பிரதான எதிர்க்கட்சி இது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாது இதற்கெதிரான சக்திகளைத் தூண்டிவிட்டு பொ.ஐ.முன்னணி அரசு பௌத்தர்களுக்கு எதிராகவே இச் சட்ட மூலத்தைக் கொண்டு வருகிறது என்னும் தோற்றப்பாட்டைக் காண்பிக்க முயற்சித்தது. இது நம் நாட்டின் வரலாற்றில் தொடர்ச்சியாக எதிர்க்கட்சிகள் செய்து வந்த கடைகெட்ட செயற்பாட்டின் தொடர்ச்சியேதான்.

சமவாய்ப்பு என்பது இந் நாட்டில் எப்போதும் சிறுபான்மையாகவும், குரல் இழந்தோராகவும் இருப்போருக்கே அதிகம் தேவைப்படுகிறது. இதில் சிறுபான்மை என்னும்போது இனரீதியான, மொழிரீதியான, மதரீதியான வேறுபாடுகள் மிக முக்கியம் வாய்ந்தவை. அதேநேரம் பேசப்படாது விடப்படும் சாதிரீதியான, பிரதேசரீதியான, ஆண் - பெண் பால் நிலை ரீதியான, மலையகம் என்னும் தாழ்வுணர்ச்சிரீதியான ஒதுக்கல்களும் எமது நாட்டில் மோசமாக நடைபெறுவது கண்கூடு.

சமவாய்ப்பு என்பதை வெறும் இனரீதியான ஒரு பாகப் பகிர்வாக மட்டுமே பார்க்கும் வண்ணம் அதன் ஆழமான கருத்துக்களை மூடிமறைத்து, ஆர்ப்பாட்டக் கூக்குரல்களை எழுப்பி பெரும்பான்மை மக்களை ஒரு மயக்கமான பீதியுணர்வுக்குத் தள்ளுவதே இத் தீயசக்திகளின் நோக்கமாக இங்கு வெளிப்பட்டுள்ளது.

உண்மையில் இது இனரீதியாக மட்டுமல்ல எல்லா விதமான சிறுபான்மைப் பிரிவுகளுக்கும் - சிங்கள மக்களுக்கும் கூடவே தான் நன்மை பயக்கக் கூடியது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.



சமவாய்ப்புச் சட்டமூலம் கொண்டு வரப்படுவது என்பது எம்போன்ற நாடுகளுக்கு முக்கியமானது மட்டுமன்றி, அதுபோன்றதொன்று கொண்டு வரப்படும்போது, அது இன்னும் செழுமைப் படுத்தப்பட்டுக் கொண்டு வரப்பட வேண்டுமென அழுத்தம் கொடுப்பதே மிகச் சரியானது.

ஆனால் எமது நாட்டில், இது யாராலோ யாருக்காகவோ கொண்டு வரப்பட்ட ஒன்று என்பதுபோல் எல்லோரும் ஏனோதானோ என்று இருக்கும் போக்கே காணப்படுகிறது. அதனால் தான் இதனை எதிர்க்கும் பிற்போக்குச் சக்திகளின் குரல் மிக ஆக்ரோஷமாகக் கேட்கிறது. பெண்ணுரிமை, ஜனநாயகம், மனித உரிமை, ஊடக சுதந்திரம் பற்றிப் பேசிய பலர் இதையிட்டுக் குரல் கொடுக்காதிருப்பது அவர்களின் சிந்தனை வெறுமையையே காட்டிநிற்கிறது.

கொழும்பில் எப்போதும் இனவாத சக்திகளின் கைப்பொம்மையாக ஆட்டப்படும் ஆனந்தா கல்லூரி மாணவர்கள் இம்முறையும் வீதியில் இறக்கப்பட்டு, இனவாத அரசியல் பகடைக் காய்களாக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்குப் பத்திரிகைகள் கொடுத்த பிரச்சாரத்தினால் அரசாங்கமும் ஒரு அடி பின்னால் வைத்து, சட்டமூலத்தை கிடப்பிலேபோட்டுவிட்டது. இறுதியில் வென்றது பிற்போக்குத் தனமும் அரசியல் பக்கிரித்தனமுமே என்றால் அதில் தவறில்லை.

சம வாய்ப்புத் தொடர்பாக சிங்கள மக்களுக்கு தமிழர்கள், முஸ்லிம்கள் பற்றி இருக்கின்ற பயம் போன்றுதான், தமிழர்களிடம் எப்போதும் முஸ்லிம்கள் பற்றிய பயம் காணப்படுகின்றது. எனவேதான் தமிழர்களின் உரிமைகள் பற்றிப் பேசும் தமிழ்க் கட்சிகள், இயக்கங்கள், பத்திரிகைகள் சம வாய்ப்பு சட்டமூலம் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இதுவும் ஒரு அரசியல் பக்கிரித்தனம்தான்.


தமிழர்களின் இந்த மனோநிலை, முஸ்லிம்களிடம் தமிழர்களை முந்திக் கொண்டு தாம் வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்றநிலையை உருவாக்கி விட்டுள்ளது. இதனால் வரவர தமிழ் மொழியைப் பேசினாலும் சகல துறையிலும் தமிழ் - முஸ்லிம் விரிசல் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

இந்த மனோரீதியான தொற்றுநோய் பீடித்த நிலைமையை மாற்ற சட்ட மூலங்களால் மட்டும் முடியுமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும்கூட கட்சிகள் பதவியேற்று அரசாங்கங்களாக வந்தபின் தொலைநோக்குப் பார்வையோடு, நாட்டின் நீண்டகால நலனோடு சிந்தித்து எடுக்கும் நடவடிக்கைகளைத் துணிந்து மேற்கொள்ளும் மனோபலத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

அதேவேளை தம்மை முற்போக்காளர் என வாய் கிழியப் பீற்றித் திரிபவர்கள் எந்த அரசாங்கமானாலும் எடுக்கும் சரியான நடவடிக்கைகளுக்கு துணிந்து ஆதரவு வழங்கும் அடிப்படை நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். •



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# "விரல்களே கண்ணைக் குத்துகின்றன!"

அமுது ஒக்டோபர் 99 இதழ் பார்த்தேன். வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் மனதைத் தொட்டுவிட்டது. ஆனால் யார் யாருக்காக அழ முடியும்? கலாநிதி நு:.மான் உடுப்புப் பெட்டியுடன் வெளிக்கிட்டார். ஆனால் கலாநிதி ராஜினி திரணகம என்னத்துடன் வெளிக்கிட்டார்...? இன்னும் யாம் அறியா கலாநிதிகள் எப்படி எப்படி வெளிக்கிட்டார்கள்...? எதற்கு எதற்கு என்று நாம் கவலைப்பட முடியும்? கண்ணீர் இருந்தால் அல்லவா அழ முடியும்? மூழ்கிய பின் சாண் போனாலென்ன? முழம் போனாலென்ன?

வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் வாசித்த பின் பிறந்ததுதான் இந்தக் கடிதம். "விரல்களே கண்ணைக் குத்துகின்றன!" என வெதும்பி இதை எழுதுகிறேன்....

யார் சொன்னது வடக்கு முஸ்லிம்களை மட்டும் வெளியேறச் சொன்னது என்று? அவர்கள் வடக்குத் தமிழர்களையும் சேர்த்தே வெளியேறச் சொன்னார்கள்! இதுதான் உண்மை!

முஸ்லிம்களின் சொத்துக்களை மட்டும் அவர்கள் அபகரிக்கவில்லை! வடக்குத் தமிழர்களின் சொத்தையும் சேர்த்தே அபகரித்தார்கள்! ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனையும் கடித்துவிட்டார்கள்.

யாழ்ப்பாண இடம்பெயர்வின்போது என்ன நடந்தது? வன்னியின் இடம்பெயர்வின் பின் என்ன நடக்கிறது? முழு பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முடியுமா? மக்கள் கூறும் வேதனைக் கதைகளை தடுக்க முடியுமா? நாளை பதியப்படுமே!

யாழ்ப்பாண இடம்பெயர்வின்போது ஒலிபெருக்கிகள் மூலம் என்ன அறிவிக்கப்பட்டது? இருபத்து நான்கு மணித்தியாலத்துள் மக்கள் இடம்பெயர வேண்டும் எனக் கோரப்பட்டது. மக்கள் திகைப்படைந்து விட்டார்கள்! ஏதோ எடுக்கக் கூடியதை எடுத்துக்கொண்டு பொறி கலங்கி புறப்பட்டார்கள். பெண்கள், பிள்ளைகள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள், நோயாளிகள் யாவரும் "மோசேயை" எதிர்பார்த்து பயணித்தார்கள்! இல்லை ஊர்ந்தார்கள்.

மண்ணில் தீராத பற்றுக் கொண்டவர்கள் வீடுகளில் ஒளிந்து இருந்தார்கள். வீட்டிலேயே மரணிப்போம் என சில உறுதியான வயோதிப - வாலிபர்கள் வனவாசமாக இருந்தார்கள்.

இறுதியில் வீடுகள் நோட்டம் பார்க்கப்பட்டு ஒளிந்து இருந்தவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்கள். வளமான வன்னி அழைக்கின்றது என்று சொல்லி, நட்ட நடுக் காட்டில் கொண்டு வந்து தள்ளிவிட்டார்கள்.

இறுதியில் என்ன நடந்தது? யாருமற்ற வீடுகளில் என்ன நடந்தது? கடைகளில் என்ன நடந்தது?

## வாசலைத் தாண்டிய கடிதம்

பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு வன்னிக்கு ஏற்றுமதியாகின. கடைகள் சூறையாடப்பட்டன. சேகரிக்கப்பட்ட யாவும் வன்னிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதே மக்களுக்கு விற்கப்பட்டன. யாரும் பறைய முடியுமோ? ஆனால், இவற்றைக் கண்டு அதிர்ச்சியுற்று மூளையை விட்டவர்கள் எத்தனை பேர்? பேசா மடந்தையானோர் எத்தனை பேர்? இதையெல்லாம் எழுதாக் கவிகள் நாடோடிப் பாட்டாக எழுதிவிட்டார்கள். மக்கள் மத்தியில் உள்ள பாடல்களை யார் தணிக்கை செய்ய முடியும்?!

இன்று வன்னியில் நடப்பது என்ன? யாருமற்ற வீடுகள், கட்டிடங்கள் உடைக்கப்படுகின்றன. சீமெந்துக் கற்கள், செங்கற்கள் பெயர்த்தெடுக்கப்படுகின்றன. கூரைகள் கழற்றப்படுகின்றன. ஓடுகள், சீற்றுகள், மரங்கள், தடிகள் எல்லாம் "தளத்துக்குப்" போகின்றன. இவர்கள் செய்தால் விடுதலைப் போராட்டம்.... ஆஹா?

இந்தச் சொத்துக்கள் எல்லாம் யாரினது? இந்த மண்ணின் மக்களது சொத்துக்கள் அல்லவா? இவற்றைத் தேட, கட்டி முடிக்க இந்த மக்கள் எவ்வளவு சிரமப்பட்டு இருப்பார்கள். இன்று கட்டிய துணியோடு அகதியாக திரிகின்றார்கள். இதை யார் நினைத்துப் பார்க்கின்றார்கள்?

இராணுவம் மரத்தை வெட்டலாம், பொருட்களைக் கொள்ளையடிக்கலாம் அல்லது அதனுடன் கூட வந்த ஓம்பனும் கொள்ளையடிக்கலாம். ஏன் என்றால் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். வடபகுதி மக்களை எதிரிகளாகப் பார்க்கிறவர்கள். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். ஆனால், போராடப் புறப்பட்டவர்கள் செய்யலாமா?

சொந்தக் கையே கண்ணைக் குத்தலாமா? எமது மண்ணை, எமது மக்களின் சொத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களே அழிக்கலாமா? காசுக்காக எதையும் செய்யலாமா? அப்படியானால் எமது இலட்சியம், பற்று, தியாகம் எல்லாம் என்னாவது?


இங்கிருந்து எங்கே போகின்றோம்? யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு ஏற்றுமதி! வன்னியில் இருந்து எங்கே? காட்டுக்கா? தொடங்கிய தொடக்கம் என்ன? நாளை நடக்கப் போவது என்ன?

இந்த மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? வாயில்லாப் பூச்சிகளாய் வெளிநாட்டிற்கு ஓடுவதையே யாவரும் விரும்புகின்றார்களா? மக்கள் ஓடிய பின் வெற்றிடத்தை என்ன செய்ய முடியும்? அரசுதான் வெளிநாட்டுக்கு ஓடுவதை விரும்புகின்றது. நீங்களுமா....? ஏன் இந்த நிலை.... இந்த அப்பாவி மக்கள் புழுக்களாய்.... விட்டில் பூச்சிகளாய்.... இங்கே சாவதா? ஏன் இந்தக் கொடுமை...? கண்களிரண்டையும் விற்றுச் சித்திரம் (சுதந்திரம்) பெறுவதா?

- இங்ஙனம்
யாழ்பாடி

www.tamilarangam.net

அரசியல் அரங்கம்



# இந்திய அரசியலை நம்பி.....

**பி.ஜே.பி. அரசு இலங்கை அரசுக்கும் சிங்களவர்களுக்கும் பாரிய அழுத்தத்தைக் கொடுக்கும் அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பக்கபலமாக நின்று ஒத்தாசை வழங்க முன்வரலாம் என்பதே இவர்களின் நம்பிக்கையாக உள்ளது. இதில் வெளியே சொல்லப்படாத விடயம் என்னவென்றால் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் பாதுகாப்பு அமைச்சராக இருப்பதனால் ஏற்கெனவே புலிகள் மீது போடப்பட்டிருக்கும் தடையுத்தரவு தொடர்பாக அவர் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கலாம். அதனால் புலிகளுக்கு இந்து சமுத்திரத்தின் ஊடாக தங்குதடையின்றி ஆயுதங்கள் உட்பட பல்வேறு பொருட்களைக் கொண்டு வருவது சுலபமாக இருக்கும். எனவே புலிகள் எப்படியாவது இலங்கை அரசோடு இறுதி யுத்தத்தில் இறங்கி தனிநாட்டைப் பெற்று விடுவார்கள் என்பதுதான்.**

கடந்த சில ஆண்டுகளாக தென்னாசியாவின் சர்ச்சைக்குரியவிடயமாககருதப்பட்ட இந்திய தேர்தல் முடிவடைந்து விட்டது. இந்திய மக்கள் தமது அறிவுக்கெட்டிய வரையில் ஓர் அரசியல் தீர்ப்பை வழங்கிவிட்டனர். தம்மையார் ஆளவேண்டும் என்பதும் யார் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதும் இந்திய மக்களைப் பொறுத்தவரை தமது நாட்டின் பிரச்சினை. இந்த வகையில் மீண்டும் இந்திரா காங்கிரசுக்கு ஒரு சாட்டை அடி கொடுத்து பாரதீய ஜனதாக் கட்சியை பதவிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் இந்திய மக்கள்.

சோனியா காந்தி தனிப்பட்ட முறையில் பீ.ஜே.பி. வேட்பாளரை ஆயிரக்கணக்கான வாக்குகளால் தோற்கடித்து வெற்றிவாகை சூடினாலும் இந்தியாவின் பிரதமர் கதிரையில் அமர்வதற்கான வாய்ப்பை அவருக்கு மக்கள் வழங்கவில்லை.

அதே வேளை இந்து மதவாதத்தை ஆயுதமாகக் கொண்டு தமது அரசியலை வளர்த்தெடுத்த அத்வானி, வாஜ்பாய் உட்பட பல பி.ஜே.பி. தலைவர்களை வெற்றிவாகை சூட வைத்தது மட்டுமன்றி அவர்களை ஆட்சிக் கதிரையிலும் அமர்த்தி விட்டிருக்கிறார்கள் மக்கள்.


இதில் இந்திய மக்களின் தீர்ப்புச் சரியா தவறா என ஆராய்வதோ, அது இந்தியாவின் எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்கப் போகிறது என்பதை ஆராய்வதோ அல்ல இக்கட்டுரையின் நோக்கம். மாறாக, இத் தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களிடையே வியாக்கியானப்படுத்தப்படுகின்ற பல்வேறு ஆருடங்களை அலசுவதேயாகும்.

பி.ஜே.பி.யின் வெற்றியையிட்டு இந்திய மக்களைவிட இலங்கைத் தமிழ் மக்களே பாரிய எதிர்பார்ப்புகளோடு பார்க்கும் மனப்பாங்கை கடந்த சில மாதங்களாகவே தமிழ் ஊடகங்கள் ஊட்டிவந்தன.

அதற்குக் காரணம் இன்று இலங்கைத் தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் ஜனரஞ்சக அரசியல் போக்கே என்றால் அதில் தவறில்லை.

அதிலும் பி.ஜே.பி. அதிகாரத்துக்கு வந்து, அவ் அரசாங்கத்தில் ஜோர்ஜ் பெனார்ண்டஸ் என்பவர் பாதுகாப்பு அமைச்சராகவந்துவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பே மிக மிக பூடகமாக பல இடங்களில் பகிரங்கமாகவும் சொல்லப்பட்டன.

இப்போது அவ்வாறு கொடுக்கப்பட்ட எதிர்பார்ப்பு யதார்த்தமாகி விட்டிருக்கிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆற்றில் இறங்கி....

குருஷேத்தரன்

இவ் வெற்றி நிலைமையைக் கண்டு இத் தமிழ் ஊடகங்கள் மகிழ்ச்சியடைவது மட்டுமன்றி அத னடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பாரியதொரு தாக் கம் ஏற்படப்போகிறது என்பதைப் போல் நம்பிக்கை தெரிவித்துள் ளன.

அதாவது பி.ஜே.பி. அரசு இல ங்கை அரசாங்கத்துக்கும் சிங்க ளவர்களுக்கும் பாரிய அழுத்தத் தைக் கொடுக்கும் அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பக்கபலமாக நின்று ஒத்தாசை வழங்க முன்வரலாம் என்பதே இவர்களின் நம்பிக்கை.

இதில் வெளியே சொல்லப் படாத விடயம் என்னவென்றால் **ஜோர்ஜ் பெர்னாண்டஸ்** மீண்டும் பாதுகாப்பு அமைச்சராக வந்திருப் பதால் ஏற்கெனவே புலிகள் மீது போடப்பட்டிருக்கும் தடையுத்தரவு தொடர்பாக அவர் மெத்தனப்போக் கைக் கடைப்பிடிக்கலாம். எனவே புலிகளுக்கு இந்து சமுத்திரத்தின் ஊடாக தங்கு தடையின்றி ஆயு தங்கள் உட்பட பலவேறு பொருட் களைக் கொண்டு வருவது சுலப மாக இருக்கும். அதனால் புலிகள் எப்படியாவது இலங்கை அரசோடு இறுதி யுத்தத்தில் இறங்கி தனி நாட்டைப் பெற்று விடுவார்கள் என்பதுதான்.

இது உண்மையிலேயே எவ்வ ளவு தூரம் யதார்த்த பூர்வமான, தர்க்க ரீதியான அரசியல் சிந் தனை என்பது கேள்விக்குரியது. இப் பத்திரிகைகள் இன்னும் ஒரு படி மேலே போய், தமிழ் நாட்டில் பதவியிலிருக்கும் முதலமைச்சர் கருணாநிதி 'தனித் தமிழ் நாடு இலங்கையில் உதயமாவதைக் கண்டு மகிழ்ச்சியுறும் முதல் தமி ழன் நானாகத்தான் இருப்பேன்' என்று பீ.பீ.சி. தமிழோசைக்குக் கூறிய செய்தியையும் பெரிதாகப் பிரசுரித்ததன் மூலம் மேற்சொன்ன பி.ஜே.பி - பெர்னாண்டஸ் நம்பிக் கையை உறுதி செய்ய கருணா நிதியையும் துணைக்கு இழுக்க முனைந்திருக்கின்றன.

இவ்வாறான வியாக்கியானங்கள் உள்ளங்கையில் கண்ணாடியை வைத்துக்கொண்டு வான நிலவை அதில் காட்டி "இதோ பிடித்துவிட் டேன் பார்" எனக் கூறும் சிறுபிள் ளை விளையாட்டுக்கு ஒப்பானது என்பது பலரின் கருத்து.

தமிழ் மக்களையும் தமிழ் அர சியலையும் பொறுத்தவரை, ஆர ம்ப காலம் முதல் அதற்கு இந் திய மக்களையும் இந்திய அரசி யலையும் பற்றி எவ்வளவு தூரம் ஆழமான புரிந்துணர்வு இருந்தது என்பது கேள்விக்குறியே.

எமது அரசியல் நினைவுகளை 25 வருடம் பின்னோக்கி வீசிப் பார்த்தல் இங்கு மிகப் பொருந்தும்.

1974ம் ஆண்டு "தமிழீழம்" பற் றிய வட்டுக்கோட்டைத் தீர்மானம் எடுக்கப்பட்டு அதன்பின்பு ஆயுத மேந்திய அரசியல் ஆரம்பமானது முதல் 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்திடம் செம்மையாக உதைவாங்கும் வரை இந்தியா மீது இலங்கைத் தமிழர்களுக்கு இருந்த நம்பிக்கை இமாலய அள வாகும். இந்த நம்பிக்கை வெறும் உணர்ச்சிகலந்த நம்பிக்கையாக இருந்ததேயன்றி ஆழமான அரசி யல் ஆய்வுக்கூடாக வந்ததாக தெரியவில்லை.

இந்த நம்பிக்கையில் தமிழ் தேசியவாத அரசியல் இயங்கங் கள் முதல் இடதுசாரி இயக்கங் கள் வரை விதிவிலக்காக இருக்க வில்லை. அதுமட்டுமல்ல, இந்திய எதிர்ப்புணர்வுகொண்டதமிழ்இயக் கங்களுக்குக் கூட இந்தியாவை பின்தளமாகப் பாவிப்பதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை.

ஆயுதப்பயிற்சி, ஆயுதம், பணம், தார்மீக ஆதரவு, பிரச்சாரத் தளம்... என எல்லா வகையிலும் இந்தி யாவிலேயே தங்கிநிற்கும் நிலை அன்று இயக்கங்களிடம் காணப் பட்டது.

1984ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது இலங்கைத் தமிழரிடையேயும் தமிழ் அரசியல் இயக்கங்களிடையேயும் பரவிய மனஅதிர்வும், கவலையும், தமிழ்ப் பிரதேசமெங்கும் கொண்டாடப்பட்ட துக்க தினமும் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

ஆனால் 5 வருடங்களின் பின் 1991ம் ஆண்டு அவரது மகன் ராஜீவ் காந்தி கொல லப்பட்ட போது அது தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசிய லுக்கும் மகிழ்ச்சியான ஒரு தினமாகக் கருதப்பட வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டது.



ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

அரசியல் மாறி விட்டது. நண்பன் எதிரியாகிவிட் டான். எனவே புதியநண்பனை நாம் தேடவே ண்டிய நிலை. ஆனால் அந்த நண்பனை அதே இந்திய நாட்டுக்குள்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய துர்ப்பாக் கிய நிலையில் இலங்கைத் தமிழ் அரசியல் இருக்கிறதென்பது மறு க்க முடியாத உண்மை.

அரசியலில் நண்பன்-எதிரி என்பது தனிநபர்கள் சம்பந்தப்பட்டதா அல்லது அரசியல் கொள்கைகள் சம்பந்தப்பட்டதா என்ற கேள்வி எப்போதும் முக் கியமானது. இலங்கைத் தமிழ் அரசியலில் எப்போ தும் கொள்கை என்பது மேலோங்கி நிற்பதை விட தனி நபரின் ஆதிக்கமும், செயற்பா டும், தீர்மானமுமே அர சியலாகக் கருதப்படு வதாலோ என்னவோ அதுதனக்குவெளியே உள்ள அரசியல் தளத்திலும் கொள் கைகள் என்பதைப் பார்ப்பதைத் தவிர் த்து தனிநபர் என க்கு எதிரியா நண் பனா என்று பார்க் கவே பழக்கப் பட்டிருக்கிறது. அந்த வகையி ல்தான் இன்று பெர்னாண்டஸ், வாஜ்பாய், கோ பாலசாமி, டாக்டர் ராம தாஸ், நெடு மாறன், கரு ணாநிதி... என, திக்கு த்திக்காக இருக்கும் தனிநபர் கள் மீது மானசீக நம்பிக்கை வைத்து அரசியல் செய்யும் நிலையில் தமிழ்ச் சமூகமும் தமிழ் அரசியலும் இருக்கிறது.



சோனியா காந்தி

இந்தியா இலங்கையையும் அதன் அரசியலையும் அதனுள் இருக்கும் சிறுபான்மை இன மக் களின் அரசியலையும் எப்படிப் பார்க்கும், எப்படி அணுகும், எப்படி அது அணுகியது என்பதற்கு கடந்த காலம் ஒரு நல்ல அனுபவ மாகும்.

அதன் அணுகுமுறை பிரதான மாக மூன்று கோணங்களில் அமை ந்திருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஒன்று, தமது ஆதிக்கப் பிராந்தியத்தில் தனது காலடியில் இருக்கும் சிறிய தீவான இலங்கையின் அரசியல் தன்னை மீறிய வேற்று நாட்டைச் சார்ந்ததாக இருக்கக் கூடாது. எனவே இலங்கை அரசைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அதன் உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றுக்குள் தன் கரங்களை வலுவாக வைத்திருத்தல்.

இரண்டாவது, இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழ் நாட்டிலுள்ள 6 கோடி தமிழர்களின் உணர்வுகளோடு தொடர்புள்ளதாக கருதப்படுவதால், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பது போன்ற நிலைப்பாட்டை எடுத்து அதன் மூலம் தேர்தல்களில் எப்படி செல்வாக்குத் தேடிக் கொள்ளலாம்.

மூன்றாவது, இலங்கைத் தமிழரின் ஆயுதமேந்திய போராட்டத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் அது ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி தனிநாடு பிரிக்கும் அளவுக்குப் போக விடாது தடுத்து அதற்குக் குறைந்த ஏதாவதொரு அதிகாரத்தை பெற்றுக்கொடுத்து தீர்த்து வைப்பது. (இந்தியாவைச் சூழவுள்ள நாடுகள் எவற்றிலாவது பிரிவினை நிகழ்ந்தால் அது இந்தியாவைப் பாரதூரமாகப் பாதிக்குமென இந்தியா நம்புகிறது)

இந்தியாவில் கடந்த 20 வருட காலங்களில் இருந்த அரசுகள் இம்மூன்று விடயங்கள் தொடர்பாக பாரிய மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கவில்லை. அதிலும், குறிப்பாக பி.ஜே.பி.யின் அடிப்படை அரசியல் நாதமே இந்தியத் தேசியம் தான். அது காங்கிரஸைவிட ஒருபடி மேலே போய் இந்து இந்தியத் தேசியத்தின் காவலனெனத் தன்னைக் காண்பிக்க அணுகுண்டை வெடிக்கவைத்தது, அதன் பாதிப்பு வாஜ்பாயை ஒரு தேசியக் கதாநாயகனாக உருவாக்கியிருப்பதையும் நாம் காண்கிறோம்.

எனவே, இந்தியாவை ஒன்றாக வைத்திருப்பதில் இந்திரா காங்கிரஸைவிட வாஜ்பாய் காட்டும் அக்கறையே அவரின் எதிர் காலத்தைக் கூட தீர்மானிப்பதாக இருக்கும். எனவே, இந்தியாவில் பிளவைத் தாண்டக்கூடியதான தமிழீழப் பிரிவினையை பி.ஜே.பி. அரசு ஆதரிக்குமா என்பதை சிந்திக்க வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்த வரை இலங்கையிலுள்ள 35 லட்சம் தமிழர்கள் என்பதைவிட இலங்கை அரசின் கொள்கையும் நிலைப்பாடுமே மிக முக்கியமாகும்.

**இந்தியா இலங்கையையும் அதன் அரசியலையும் அதனுள் இருக்கும் சிறுபான்மை இன மக்களின் அரசியலையும் எப்படிப் பார்க்கும், எப்படி அணுகும், எப்படி அணுகியது என்பதற்கு கடந்தகாலம் ஒரு நல்ல அனுபவமாகும். அதன் அணுகுமுறை பிரதானமாக மூன்று கோணங்களில் அமைந்திருந்தன.**

இந்திய அரசின் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் இந்திய அரசியல், ஐக்கிய இந்தியக் கொள்கை, இந்திய பாதுகாப்புத்துறை, இந்திய அதிகாரத் துறை (Bureaucracy), ஊடகத்துறை என்கின்ற எல்லாவற்றையும் தாண்டி ஜோர்ஜ் பெர்ணான்டஸ் போன்ற ஒருவரால் என்ன செய்துவிடமுடியும் என்பதும் சிந்திக்கப்பட வேண்டிய கேள்வி.

இந்தியத் தேசியமென்பது எப்பொழுதும் இந்தியாவுக்கான அவமானமென வருகின்றபொழுது இன, மத, மொழி, கலாசார, பிரதேச எல்லைகளைத் தாண்டிய ஒன்றாக கொதித்தெழுந்தே பழக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இந்திய சுதந்திரத்தின் பின்பு அங்கு நடத்தப்படும் அரசியலில் மட்டுமன்றி அந்த நாட்டின் கல்வி, விளையாட்டு, யுத்தம், கலை, இலக்கியம், தொழில்நுட்பம்.... என சகலதிலும் "இந்தியா", "இந்தியன்" என்கின்ற உணர்வுடன்கூடிய அகங்காரத் தொனி ஒரு பொதுப் போக்காக மேவி நிற்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இந்தியாவின் கொள்கை முடிவுகள் அதன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே அதிக அக்கறையாக இருக்குமென்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

இந்திய அரசியலில் காணப்படும் அப்போக்கின்சரிபிழைபற்றிஇங்கு நாம் ஆராயத் தலைப்படவில்லை.

1987ல் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்ட போதும், தனது பெருமையைப் பற்



## பார்க்க முடியாத மில்லேனியத்தின் பிறப்பு

புதிய மில்லேனியத்தின் பிறப்பைக் கொண்டாடுவதை உலகில் எல்லோரும் பார்க்க முடியும் - பார்வை இல்லாதவர்களைத் தவிர...! அதற்காக அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் பார்வையற்றோர் புதிய மில்லேனியத்தின் பிறப்பை தொட்டு, முகர்ந்து, உணர்ந்து, புரிந்துகொள்வதற்கான பொருட்காட்சி ஒக்டோபர் 5ம் திகதி நடத்தப்படுகிறது. அதில் வைக்கப்பட்டிருந்த ஓர் ஆக்கத்தை பார்வையற்ற ஒருவர் தொட்டு, உணர்ந்து, புரிந்துகொள்வதையே படத்தில் காண்கிறீர்கள். இதுபோல் 65 வகைப் படைப்புகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. இதில் சிறந்த படைப்புக்குப் பரிசும் தரப்படவுள்ளதாம். நடுவர்களாக நான்கு பார்வையற்றவர்களும் மூன்று பார்வையுள்ளோரும் பங்குபற்றியதே மற்றொரு புதுமை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றிய அக்கறையுடனேயே அது விடயங்களைக் கையாண்டிருக்கும். (யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் உணவுப் பொட்டலம் போட்டது முதல் ஜே.ஆர். அரசைப் பணியவைத்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தைக் கையொப்பமிடச் செய்ததுவரை.)

ஆனால் அத் தலையீட்டினால் அது எந்த மக்களுக்காக உதவி செய்கிறோம் எனக் காண்பிக்க முற்பட்டதோ, அதே மக்களின் அரசியலினால் அதன் பெருமைக்கு விழுந்த அடியையும், ஏற்பட்ட அவமானத்தையும் அது மறக்கவில்லையென்பதை அதன் கடந்தகால அரசியல் நிரூபித்திருக்கிறது.

புலிகளுக்கெதிரான தடை, புலிகளை ஆதரித்ததற்காக கருணாநிதியின் ஆட்சிக் கலைப்பு, ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்பட்ட தண்டனை இலங்கைத் தமிழர்களுக்கு வீசா வழங்குவதில் காட்டப்படும் கடுமையான நடைமுறை, இந்தியாவுக்குச் செல்லும் இலங்கைத் தமிழர்களுக்கு அங்கு பதிவதில் முதற்கொண்டு மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள்... என எல்லாம் இதையே சுட்டிக் காட்டுகின்றன.

வேண்டுமானால் தமிழ் நாட்டிலுள்ள தலைவர்களும் பி.ஜே.பி. தலைவர்களும் 'இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள்' என்று பட்டும் படாமலும் சில அறிக்கைகளை விடுவார்களே ஒழிய அதற்கு மேல் இலங்கை அரசிற்கு பாரிய அழுத்தமெதனையும் கொடுக்க முயல்வார்களா என்பது சந்தேகமே. இலங்கை அரசியலுள் தமிழத் தலைவர்களைப் பற்றியும் சிங்களத் தலைவர்கள் பற்றியும் இந்தியாவின் கணிப்பீடு 'இவர்கள் எப்போதும் நம்பமுடியாதவர்கள்' என்றே ஜே. என். டிக்ஷிட் அவர்கள் ஒரு பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் கூறியிருக்கிறார்.


இந்திய அரசியலில் ஏற்படும் மாற்றத்திற்கு ஊடாக இலங்கை அரசியலிலும் தமிழ் அரசியலிலும் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்ப்பது இன்றைய நிலையில் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் செயல் போன்றதாகும். ஏனெனில் இந்திய - இலங்கைக்கு இடையேயான அரசியல் உறவும் கொடுக்கல் வாங்கல்களும் கடந்த கால நடைமுறைகளும் எப்படி இருந்தன என்பவையே அவற்றைத் தீர்மானிக்கும்.

ஆனால் எமது அரசியலைப் பொறுத்தவரை "நாங்கள் எப்போதும் இப்படித்தான் இருப்போம். எந்த ஒரு அடிப்படையிலும் ஒற்றுமைப்பட மாட்டோம், கொலைசெய்வதை குறைக்க மாட்டோம், மாற்றுக் கருத்து வைத்தால் மரண தண்டனை வழங்குவோம், விரும்பினால் தான் பேச்சுவார்த்தைகளுக்குவருவோம், மக்கள் அழிவதைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம், உலகமனிதாபிமானசட்டங்களைப் பற்றி எமக்கு எந்தக் கவலையும் இல்லை..." என்ற நிலை இருக்கும் வரைக்கும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாதுகாப்புஅமைச்சராகமட்டுமல்ல பிரதமராக வந்தாலும் கூட ஒன்றும் பெரிதாக எமக்குக் கிடைத்துவிடப் போவதில்லை.

கடந்த 20 வருடமாக மாயைகளையே நம்பி, அவற்றையே எமது அரசியல் நம்பிக்கைகளாக ஏற்றுக்கொண்டு பழக்கப்பட்ட நமக்கு இப்போது புதியதொரு மாயையை ஏற்படுத்தி அதை நம்பி இன்னும் ஐந்து வருடத்திற்கு ஆயிரக்கணக்கான மக்களின் அழிவை நியாயப்படுத்துவதுதான் இந்த இந்திய நம்பிக்கையின் இறுதி முடிவாக இருக்கும்.

இன்று இலங்கையிலும் ஆசியப் பிராந்தியத்திலும் ஏன் உலகெங்கிலும் கூட இலங்கைத் தமிழரின் பிரச்சினை ஒரு அரசியல் தலையிடியாகத்தான் பார்க்கப்படுகிறதே தவிர அதற்கிருந்த தார்மீக ஆதரவும் வலுவும் இப்போது இல்லை என்கிற உண்மையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வசதிஉள்ளவர்களும் வயதுமுதிர்ந்தவர்களும் தப்பினோம் பிழைத்தோம் என்று நாட்டை விட்டு ஓட வசதி இல்லாதோரும் வயது முதிராப் பாலகர்களும் பலிக்கடாக்களாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்டம் இந்தியாவைப் பொறுத்த வரையும் பத்தோடு பதினோராவது பிரச்சினையாகத்தான் கணிப்பிடப்பட முடியும்.

யுத்தத்தைச் செய்பவர்களும் யுத்தத்தைவியாபாரமாக்கிக் கொடுப்பவர்களும் அது இல்லாமல் அரசியலே செய்ய முடியாதவர்களும் தொடர்ந்துசெய்யும் இந்த ஏமாற்று வித்தையை புரிந்து கொள்ளுவது மக்களைப் பொறுத்தவரை மிக அவசியமானது. எமது நாட்டு அரசியலை ஆரோக்கியமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றுவதற்கான அழுத்தத்தைப் போடுவதும் அதற்காக ஒரு பொது ஏற்றுக்கொள்ளலுக்கு அரசியல் கட்சிகளை வரச் செய்வதும்தான் இன்று இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரை மிக அவசியமானதென்பதை யாராலும் மறுக்க முடியுமா? ●




எமதூரில் நெற்றியில் கைகளில் பச்சை குத்தியிருக்கும் வயது முதிர்ந்தோரை "அந்தப் பச்சை குத்தின பழசு" என நாம் கேலி செய்திடுவோம். அது இன்று உலக அரங்கில் பெரும் கலையாக மதிக்கப்படுகிறது. அதனை "டாட்டு" (Tatto) என மேலை நாட்டார் அழைக்கின்றனர். கடந்த அக்டோபர் மாதம் "லார்சோ" நகரில் நடைபெற்ற "டாட்டு" விழாவில் கலந்துகொள்ள பல நாடுகளில் இருந்தும் "டாட்டு" கலைஞர்கள் சென்றார்கள். ஆனால் மேற்குலகினர் நம் போல அல்ல. உடம்பு முழுவதும் வர்ணப் படங்களாகவே குத்திக் கொள்வதில் அவர்களுக்குப் பைத்தியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொல்லை தீர்ப்பதே நோக்கம்...

**பொலிஸ் பதிவு, சோதனைச் சாவடிகளில் பதிவுப் பத்திரத்தைக் கோருதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் தொடர்பான சில புதிய அறிவுறுத்தல்கள் அண்மையில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தொல்லை தவிர்ப்புக் குழு மீது கவனம் திரும்புள்ள இத் தருணத்தில் அதன் தலைவரான அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியை அமுது நேயர்களுக்காக சந்தித்தோம். அவருடன் எஸ்.எஸ்.பி, எம்.பி. (எல்மோ) ராபனும் கலந்துகொண்டு வழங்கிய சிறப்புப் பேட்டி இது**

**பேட்டி கண்டவர் : து. பாஸ்கரன்**



*கேள்வி:* உங்கள் தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயற்பாடு திறமையாக உள்ளதெனக் கருதுகிறீர்களா?

*பதில்:* ஆம்! நாம் ஒவ்வொரு கிழமையும் கூடுகிறோம். முறைப்பாடுகளை ஆராய்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இந்தக் கமிட்டி 1998ம் ஆண்டு ஜுலை மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. அன்றுதொடக்கம் இதுவரை 64 கூட்டங்களை நடத்தி விடயங்களை ஆராய்ந்துள்ளோம்.

*கேள்வி:* உதாரணத்திற்கு அப்படி நீங்கள் கையாண்ட விடயங்கள் என்ன?

*பதில்:* எமக்கு இதுவரை 284 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை பல்வேறு வகைப்பட்ட முறைப்பாடுகள். அவற்றையெல்லாம் தீர்க்குமுகமாகவிசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

*கேள்வி:* அவை பொதுவாக எப்படிப்பட்ட விடயங்கள்?

*பதில்:* நீண்டகாலமாக தடுப்புக்காவலில் உள்ளவர்கள் பற்றியவை, கைது செய்யப்பட்டபின் எங்கு இருக்கிறார்கள் என்று உறவினர்களுக்குத் தெரியாமல் இருக்கும் நபர்கள் தொடர்பானவை, வவுனியாவுக்குச் செல்ல அனுமதிக்கப் படாதிருப்பவர்கள் தொடர்பானவை.....

*கேள்வி:* வவுனியாவிலிருந்து இங்கு வருவதற்கு ஒரு பாஸ் முறையைக் கையாளுகிறார்களே, அதிலுள்ள தொல்லைகளைக் களைய முற்பட்டிருக்கிறீர்களா?

*பதில்:* வவுனியாவிலிருந்து கொழும்பு வருவோர் பலர் விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து வருவதாலேயே பாதுகாப்புக் கருதி இந்த பாஸ் நடைமுறைகள் அப்பிரதேச காவல்துறையினரால்அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ் வழிமுறைகளை மாற்றியமைப்பதென்பது அங்குள்ள பாதுகாப்பு நிலைமையோடு சம்பந்தப்பட்டது. ஆயினும் அங்கிருந்து வரும் மக்கள் தரும் முறைப்பாடுகளை ஆராய்ந்து அவர்களுக்குள்ள தொல்லைகளை நீக்கி வைக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

*கேள்வி:* வவுனியாவிலிருந்து வருவோருக்கு கொழும்பில் 2 கிழமை வரைதான் தங்க அனுமதிக்கப்படுவதாகவும், அவர்கள் தொடர்ந்து இருக்க அனுமதி மறுக்கப்படுவதாகவும் முறைப்படுகிறார்களே?

*பதில்:* இரண்டு கிழமை என்று ஒரு வரையறை போடப்படவில்லை. அது அவர்கள் கொழும்புக்கு வரும் காரணத்தைப் பொறுத்து மாறுபடும். அவர்கள் கொழும்புக்கு வருவதற்கான காரணம் கேட்கப்பட்டு அவ் விடயத்தை முடிப்பதற்கான காலத்தை மதிப்பிட்டே அனுமதிகள் வழங்கப்படுகின்றன. பாஸ்போட் எடுப்பது போன்ற காரணங்களுக்கு குறுகிய காலம் போதுமாக இருக்கும். அதேவேளை மருத்துவப் பரிசோதனை போன்றவற்றிற்கு அதிக நாட்கள் தங்கவேண்டியிருக்கும். படிப்பு போன்றவற்றுக்கு நீண்ட நாட்கள் தங்கியிருக்கவேண்டிய அவசியம் இருக்கும். இக் காரணங்களுக்கேற்றவாறு அவர்கள் கொழும்பில் தங்கியிருப்பதற்கான கால அனுமதியைத் தீர்மானித்து உரியவாறே வழங்குகிறார்கள்.

*கேள்வி:* கொழும்பு வருபவர்கள் தமக்குப் பிணையாக அங்கு ஒருவரை நிறுத்திவிட்டு வரவேண்டுமென்றும், வந்தவர் உரிய காலத்துக்குள்திரும்பாவிடில் பிணை நின்றவர் கேள்விக்குட்படுத்தப்படுவாரென்றும் கூறப்படுவது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* திரும்பிச் செல்லாததற்காக அப்படி யார்மீதும் நடவடிக்கை எடுத்ததாக முறைப்பாடுகள் எதுவுமில்லை. கொழும்பு வந்தவர் அனுமதிக்கப்பட்ட காலத்தைவிட அதிக நாள் நிற்க நேரிடின் அவர் இங்கு பதிந்துள்ள பொலீஸ் நிலையத்தில் காரணத்தை விளக்கி கால நீடிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

*கேள்வி:* ஆனால் கொழும்பு வருவதற்குப் பாஸ் பெற பல நாட்கள் செல்கிறதென்கிறார்களே...?

*பதில்:* அங்கிருந்து வருபவர்கள் கொழும்பில் எங்கு தங்கப் போகிறார்களெனக் கூறவேண்டும். அவ் விபரத்தை வவுனியா பொலீஸார் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த கொழும்பு பொலீஸாருக்கு அறிவிப்பர். அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளவர்களோடு தொடர்பு கொண்டு வவுனியாவில் இருந்து வருபவரைத் தங்கவைக்க அவர்கள் ஒப்புதல் தருகிறார்களா என்றறிந்து அதனை வவுனியாவிற்கு அறிவிப்பர். சம்மதம் கிடைத்தபின் விண்ணப்பதாரிகளுக்கு கொழும்பு செல்ல அனுமதியளிக்கப்படும். இவ்வாறுவிசாரித்தறிவதற்கு சில நாட்கள் செல்லலாம். அதுதான் இத் தாமதத்திற்குக் காரணம்.

*கேள்வி:* தொல்லை தவிர்ப்புக் குழுவின் நோக்கங்களென்ன?

**எமக்கு இதுவரை 284 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றையெல்லாம் தீர்க்குமுகமாக விசாரணைகளை நடத்தி, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பதில்:** இது பிரதானமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைக் களையவே அமைக்கப்பட்ட கமிட்டி. நாட்டின் பாதுகாப்பு நிலைமை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டங்கள் நடைமுறைகளால் சாதாரண தமிழ் மக்கள் தொல்லைக்குள்ளாகாமல் பார்த்துக்கொள்வதையும் அவ்வாறு ஏதும் நிகழ்ந்தால் அவற்றிலிருந்து சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கவும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கவுமென இக்கமிட்டி உருவாக்கப்பட்டது.

**கேள்வி:** இக் கமிட்டிக்கு தமிழ் மக்கள் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகள் குறித்த முறைப்பாடுகளை எடுத்து வருவது எவ்வளவு தூரம் சாத்தியமாக உள்ளது?

**தற்போது எமது நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு அதிக அளவில் தெரிய வருவதால் தமிழ் மக்கள் இனிவரும் காலத்தில் தங்கள் முறைப்பாடுகளைத் தயக்கமின்றி எமக்குத் தெரிவிக்க முன்வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.**

**பதில்:** 284 முறைப்பாடுகள் வந்துள்ளனவே!

**கேள்வி:** தொல்லைக்குள்ளாகியிருக்கக்கூடிய தமிழ்மக்களின் தொகை ஒன்றேகால் வருடத்தில் 284 என்பதைவிட பல மடங்கு அதிகமல்லவா?

**பதில்:** அவர்கள் தமது முறைப்பாடுகளை வழங்குவதில் எந்த வித தடையும் இல்லை. நாம் அதற்கான சகல வசதிகளையும் செய்துள்ளோம். அவர்கள் நேரடியாகவும் முறையிடலாம். அல்லது தமது பாராளுமன்ற உறுப்பினர்களூடாகவும் முறையிடலாம். அவர்களும் இக் கமிட்டியின் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

இக் கமிட்டி பற்றி பொதுமக்களுக்கு அதிக அளவு தெளிவும் அறிமுகமும் இல்லாதிருந்திருக்கலாம். ஆனால் தற்போது எமது நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு அதிக அளவில் தெரிய வருவதால் தமிழ் மக்கள் இனிவரும் காலத்தில் தங்கள் முறைப்பாடுகளை தயக்கமின்றி எமக்குத் தெரிவிக்க முன்வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:** உங்கள் கமிட்டி, மக்கள் தொடர்புக்கான என்ன ஏற்பாடுகளைச் செய்துள்ளது?

**பதில்:** பொதுமக்கள் தொடர்பு கொள்ள காரியாலயம் ஒன்றை அமைத்துள்ளோம். அது **154, காலி வீதி, கொழும்பு -3** என்ற முகவரியில் அமைந்துள்ளது. பொதுமக்கள் அங்கு நேரடியாகச் செல்லலாம். அல்லது **342887** என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். முறைப்பாடுகளை ∴பக்ஸ் மூலமும் **342995, 333716** ஆகிய இலக்கங்களூடாக அனுப்பி வைக்கலாம்.



**கேள்வி:** தமிழ் மக்களோடான பரிபாஷைக்கான மொழி குறித்து என்ன ஏற்பாடு செய்துள்ளீர்கள்?

**பதில்:** மொழிப் பிரச்சினை எழாது. எந்த மொழியிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். கடிதம் எழுதலாம். தமிழ் மொழியில் செயலாற்றக் கூடியவர்கள் உள்ளார்கள். அங்கு செயலாளராக இருப்பவரும் அத்தகையஒருவரே.

**கேள்வி:** கொழும்பைத் தவிர திருமலை, மட்டக்களப்பு, மலையகம் போன்ற ஏனைய பிரதேசங்களது பிரச்சினைகளையும் கையாளுவீர்களா?

**பதில்:** இது நாடுபூராவும் செயற்படும்.

**கேள்வி:** அதற்கு எந்த அளவு அதிகாரம் வாய்ந்ததாக இக் கமிட்டி உள்ளது? பாதுகாப்புப் படையினரின்நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய தொல்லைகளையிட்டு நடவடிக்கை எடுக்க உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா?

## பொலிஸ் பதிவு தொடர்பாக ஒரேவிதமான நடைமுறையைக் கடைப்பிடிக்கும்படி சகல பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் பொலிஸ் தலைமைச் செயலகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கை (இல:1455/99)

1) வீட்டு உரிமையாளர்கள் தற்காலிக குடியிருப்பாளர்களைப் பொலீஸில் பதிவு செய்வதில் பொலீஸ் நிலையங்களில் பல்வேறுபட்ட முறைகள் கையாளப்படுவதாகவும் அவை பொதுமக்களுக்கு தொல்லை விளைவிப்பதாகவும் பொலீஸ் தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) அதனால் தற்காலிக குடியிருப்பாளர்களைப் பதிவதில் ஒரேவிதமான பதிவு முறை கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகிறது. இதன்பின் சகல பொலீஸ் நிலையங்களும் பதிவுக்கான விண்ணப்பங்களைப் பெறும்போது பின்வரும் நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**குறிப்பு:** கொழும்பிலும் மற்றைய இடங்களிலும் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர்கள் பதியவேண்டிய அவசியமில்லை. **'வீட்டு உரிமையாளர்கள்'** என்ற பதம் - வாடகை வீடொன்றின் குடியிருப்பாளர்கள் உட்பட லொட்ஜ்கள், ஹொட்டேல்களின் முகாமையாளர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய, வதிவிடங்களின் பிரதான குடியிருப்பாளர்களைக் குறிக்கும்.

3) பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள பதிவுப் பத்திரம் பயன்படுத்தப் படவேண்டும். அவை வீட்டு உரிமையாளரால் நிரப்பப்பட்டு, பிரதியெடுக்கப்பட்டு, அதற்கான பதிவு இலக்கமொன்றும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4) பதிவுப் பத்திரத்துடன் அடையாளப் படுத்தும் ஆவணங்களான தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இம் மூல ஆவணங்களுடன் அவற்றின் ∴போட்டோஸ்டெட் பிரதியொன்றும் கையளிக்கப்படல் வேண்டும். இந்தப் ∴போட்டோஸ்டெட் பிரதியும், பதிவுப் படிவமும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசம் இருக்க, அடையளப்படுத்தும் மூல ஆவணங்களும் (அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு) பதிவுப் பத்திரத்தின் பிரதியும் வீட்டு உரிமையாளரிடம் திருப்பியளிக்கப்பட வேண்டும்.

5) தற்காலிக குடியிருப்பாளராக வருகை தந்தவரின் அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டுகளிலுள்ள புகைப் படங்கள் அவர்களது தற்போதைய தோற்றத்தை ஒத்திரா விட்டால் அல்லது அவை பழுதடைந்திருந்தால் வீட்டு உரிமையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட (மூன்று மாதத்திற்குள் எடுக்கப்பட்ட) இரு புகைப்படங்கள் பதிவுப் பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

6) இல. 5ல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில், ஒரு புகைப்படம் மூலப் பதிவுப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வைத்துக் கொள்ளப்படவும் மற்றைய புகைப்படம் அவரால் பாவனைக்கு அதிகாரமளிக்கப் பட்டு பதிவுப் பத்திரப் பிரதியுடன் இணைக்கப்படவும் வேண்டும்.

7) இவ்வாறான புகைப்படங்கள் அறிவுறுத்தப்பட்டபடி இணைக்கப்படுதல், அவை துஷ்பிரயோகப்படுத்தப்படுவதைத் தடுக்கக் கூடியவண்ணம் முத்திரை குத்தப்படுதல் போன்ற முன்ஜாக்கிரதை நடவடிக்கைகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



**நாட்டின் பாதுகாப்பு நிலைமை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டங்கள், நடைமுறைகளால் சாதாரண தமிழ் மக்கள் தொல்லைக்குள்ளாகாமல் பார்த்துக்கொள்வதையும் அவ்வாறு ஏதும் நிகழ்ந்தால் அவற்றிலிருந்து சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கவும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கவுமென இக்கமிட்டி உருவாக்கப்பட்டது.**

**பதில்:** இது ஜனாதிபதி கமிட்டி. சம்பந்தப்பட்ட எவரையும் நாம் விசாரிக்கலாம். அண்மையில் மட்டு நகர் சித்தாண்டி ஆலயத்தில் படையினரின் அத்துமீறல் தொடர்பான ஒரு முறைப்பாடு வந்தது. அதற்கு அப் பிராந்திய இராணுவ ஜெனரலை விளக்கம் கேட்டு அழைத்திருந்தோம்.

ஏன் இன்றைய (25.10.1999) கமிட்டிக்கு **டி.ஐ.ஜி. கொட்டகதெனிய** அழைக்கப்பட்டிருக்கிறார். உயர் பொலிஸ் அதிகாரிகளையெல்லாம் தேவைப்படும்போதுநாம்அழைத்து அவ்வப்போது அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறோம்.

**கேள்வி:** எத்தகைய அறிவுறுத்தல்களை வழங்குகிறீர்கள்?

**பதில்:** இன்றைய கூட்டத்தில் சகல பொலீஸ் நிலையங்களிலும் தமிழில் முறைப்பாடுகளை ஏற்பதற்கு ஏதுவாக தமிழ் தெரிந்த அதிகாரிகளை கடமையிலீடுபடுத்தும் படியான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதனையிட்ட சுற்றறிக்கையை பொலீஸ் மா அதிபர் உடனடியாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விடுத்துள்ளார். அதுபோல பொலீஸ் நிலையப் பதிவு நடவடிக்கைகளில் ஒரேவிதமான விதிமுறைகளை சகல பொலீஸ்நிலையங்களும் கடைப்பிடிக்கும்படியும் அறிவுறுத்தல்வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** சில பொலீஸ் நிலையங்களில் பதிவதற்கு புகைப்படம் தேவையென்று தெரிவிக்கப்படுகிறதே?

**பதில்:** புகைப்படம் வழங்கத் தேவையில்லை. அத்தாட்சிப்படுத்தும் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள படம் பழுதுபட்டதாக, அல்லது காலாவதியாகி தற்போதய தோற்றத்திலிருந்து மாறுபட்டதாகக் காணப்பட்டால் மட்டுமே புகைப்படம் வழங்கக் கோரப்படலாம். இதையிட்டு பொலீஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அப்படியான நடைமுறை இனி இருக்காது.

**கேள்வி:** பொலீஸ் பதிவு தொடர்பான உங்கள் தெளிவான அறிவுறுத்தல் என்ன?

**பதில்:** ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். முதலில் எல்லோருமே பதிவு செய்யவேண்டுமென்ற விதி இல்லை. ஒரு பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலீஸ் பொறுப்பதிகாரி அவ்வாறு பதிய வேண்டுமென அப் பகுதியைச் சேர்ந்தவர்களைக் கோரினால் அவர்கள் பொலீஸ் நிலையங்களில் தங்கள் விபரங்களைப் பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பாகவே இப் பதிவு. ஆனால் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் பதிய வேண்டிய அவசியமில்லை. தற்காலிகக் குடியிருப்பாளர்களே பதிய வேண்டும்.

**கேள்வி:** நிரந்தர குடியிருப்பாளர்களென்பதை எப்படி வகையீடு செய்வது?

**பதில்:** அடையாளஅட்டை கொழும்பைச் சேர்ந்ததாக இருந்தால், வாக்காளர் பதிவு கொழும்பிலிருந்தால், கொழும்பில் நிரந்தர வேலையிருந்தால்...

**கேள்வி:** தற்காலிக குடியிருப்பாளர்கள் பதிவதன் ஏனைய விதிமுறைகள்...?

**பதில்:** அவர்கள் தங்கியிருக்கும் பொலீஸ் நிலையப் பகுதியில் பதியும்படியான அறிவுறுத்தல் அமுலிலிருந்தால் பொலீஸ் நிலையத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதில் விபரங்களை நிரப்பி பதிவு செய்யலாம். பதிவு பற்றி வர்த்தமானி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதுவே விதிமுறை.

**கேள்வி:** பதிவுசெய்தவர்கள்சில பொலீஸ் நிலையங்களில் மீண்டும் மீண்டும் குறித்த தவணைகளில் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள கேட்கப்படுகிறார்களே?

**பதில்:** அப்படி ஒரு விதி இல்லை. பதிவு செய்த விபரங்களில் ஏதும் மாற்றம் ஏற்பட்டிருந்தால் மட்டுமே பதிவைப் புதுப்பிக்க வேண்டும். வன்னி போன்ற பிரதேசங்களிலிருந்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காலம் முடிந்துவிட்டால், அல்லது யாராவது புதிதாக வந்திருந்தால், போயிருந்தால் மட்டுமே புதுப்பிக்க வேண்டும். மாற்றமேதும் இல்லாவிட்டால் ஒருமுறை பதிந்தால் போதும்.

**கேள்வி:** பதிவுப்படிவத்தைசோதனைச் சாவடிகளில் காண்பிக்கத் தேவையில்லை என்ற அறிவுறுத்தல் கடைப்பிடிக்கப்படுகிறதா?

**பதில்:** இதுபற்றித் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்பின் கோரப்படுவதாக எந்த முறைப்பாடும் இல்லை. ●

8) (வடக்கு கிழக்கிலிருந்து வருவோரைப் பொறுத்தவரை) செல்லுபடியாகக் கூடிய அடையாளப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லாதவர்கள் அவற்றுக்குப் பதிலாக அவர்கள் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்தை வழங்கிப் பதிவு செய்து கொள்ளலாம். வவுனியாவிலிருந்து வருபவர்களைப் பொறுத்தவரை தற்போது நடைமுறையிலுள்ள வழிமுறை தொடரும். தோட்டப் பகுதிகளிலிருந்து வருவோரைப் பொறுத்தவரையில் அவர்கள் நிரந்தரமாக வசிக்கும் தோட்டத்தின் சுப்பிரீன்டன்டனால் வழங்கப்படும் உறுதிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

9) சாதாரண சூழ்நிலையில், பதிவு கோரும் தற்காலிக குடியிருப்பாளர்கள், ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் காரணங்களுக்காக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் கோரப்பட்டாலேயன்றி, பொலீஸ் நிலையத்துக்கு வருகைதர வேண்டியதில்லை.

10) முழுமைப்படுத்தப்பட்ட பதிவுப் பத்திரங்கைளப் பாதுகாப்பது பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பொறுப்பாகும். ஏ1 பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இக் கடமைகளை சப் இன்ஸ்பெக்டர் அல்லது அத் தரத்துக்கு மேற்பட்ட ஒரு சிரேஷ்ட அதிகாரிக்குப் பாரப்படுத்தலாம்.

11) ஒரு நாளில் விநியோகிக்கப்படக்கூடிய பதிவுப் பத்திரங்களின் தொகை குறித்து எவ்வித கட்டுப்பாடும் இல்லை. ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் எவ்விதத் தடையுமின்றி ஒவ்வோர் விண்ணப்பப் படிவம் வழங்கப்படல் வேண்டும்.

12) 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் - அவர்கள் அப் பிரதேசத்தில் தங்கப் போகும் காலம் எதுவாயினும் - பதிவு செய்துகொள்ள வேண்டும்.

13) தற்காலிக குடியிருப்பாளராக வருகை தந்தவர் திரும்பிச் செல்லுமிடத்து, அல்லது தங்கும் காலத்தை நீடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமிடத்து வீட்டு உரிமையாளர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் பதிவுப் பத்திரத்தைக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (இதை அவர் கடிதம் மூலமும் செய்யலாம்)

14) 8ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலிருந்து வருவோர் கொழும்பில் உபயோகிக்க வாகனமெதையும் கொண்டுவந்திருப்பின் வாகனத்தின் இலக்கம், வகை, வகுப்பு பற்றிய தகவல்கள் பதிவுப் பத்திரத்தில் பதியப்படல் வேண்டும்.

15) மேற்பார்வை அதிகாரிகள் இவ் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தி அவற்றின் அமுலாக்கத்தை ஒழுங்காகக் கண்காணிப்பர்.

**எச். எம். ஜி. பி. கொட்டகதெனிய**
**சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்**

**(ஒப்பம்) பி. எல். வி. டி.. எஸ். கொடிதுவக்கு**
**பொலிஸ் மா அதிபர்**

# பாகிஸ்தான் ?




**1947** ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க முன்வந்தவுடனேயே முஹம்மட் அலி ஜின்னா அவர்கள் முஸ்லிம் மக்களுக்கான தனியான தேசம் ஒன்றைக் கோரி நின்றார். அன்று உருவானதுதான் பாகிஸ்தான். அலி ஜின்னா அவர்கள் அதன் தேசிய தந்தை என இன்றும் கௌரவிக்கப்படுகின்றார். பாகிஸ்தான் தனி நாடாக பிரகடனப்படுத்தப்பட்டு ஆளப்பட்டாலும் 1958 ஆம் ஆண்டுதான் ஜனாதிபதி மிஸ்ரா அவர்களின் தலைமையில் ஒரு உத்தியோகபூர்வ குடியரசாக உருவாகியது.

இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற காரணத்தினாலேயே பாகிஸ்தான் இந்தியாவின் பரம எதிரி எனக் கருதப்படுகிறது. பாகிஸ்தானிய - இந்திய எல்லையில் இருக்கும் வனப்பு மிக்க காஷ்மீர் பிராந்தியம் உனக்கா எனக்கா என்ற பிரச்சினையில் இரு நாடுகளும் பாம்பும் கீரியும் போல் மூர்க்கமாக மோதிக் கொண்டன. பாகிஸ்தானில் யார் பதவிக்கு வந்தாலும் காஷ்மீர் எல்லைப் பிரச்சினையில் இந்தியாவோடு கடும் போக்குக் கொண்ட ஒருவரைத்தான் பாகிஸ்தானிய மக்கள் உண்மையான பாகிஸ்தானியனாகக் கருதினார்கள்.

கடந்த ஒக்டோபர் 12ம் திகதி மாலை பாகிஸ்தானிய இராணுவம் நவாஸ் ஷெரீபின் ஆட்சியைக் கவிழ்த்து இராணுவப் புரட்சியை செய்ததற்கும் இதே காஷ்மீர் பிரச்சினைதான் காரணம் என்பதுதான் பாகிஸ்தான் அரசியலின் அவலம்.

இராணுவப் புரட்சிக்கு உடனடிக் காரணம், பாகிஸ்தான் இராணுவக் கொமாண்டர் ஜெனரல் முஷார.ஃபை நவாஸ் ஷெரீப் பதவி நீக்கம் செய்ததே என்று கூறப்படுகிறது. ஆனாலும் கடந்த இரு மாதங்களுக்கு முன் காஷ்மீர் எல்லையில் இருந்து பாகிஸ்தான் படைகளை வாபஸ் பெறும்படி நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டதிலிருந்தே பாகிஸ்தானிய இராணுவம் மிகவும் கொதிப்படைந்திருந்தது என்று கூறப்படுகிறது. பாகிஸ்தானிய மக்களிடையே நவாஸ் ஷெரிப் இந்தியாவின் முன்னால் மண்டியிட்டு எங்களை அவமானப்படுத்தி விட்டார் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. (இந்தியா அணுகுண்டை வெடிக்க வைத்ததற்குப் பதிலடியாக பாகிஸ்தானிய அணுகுண்டை வெடிக்க வைத்தபோது "நவாஸ் ஷெரீப்...! ஜிந்தாபாத்!" என கூக்குரலிட்ட அதே மக்கள்தான் இப்போது நவாஸ் ஷெரீ.ஃபை துரோகி என்கின்றனர்).



ஜெனரல் முஷார.ஃப் இலங்கை இராணுவத்தின் பொன்விழாக் கொண்டாத்திற்காக வந்து விட்டுத் திரும்புகின்றபோது அவர் விமானத்திலிருக்கும் பொழுதே திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டார். பிரதமர் நவாஸ் ஷெரீபின் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஜெனரல் ஸியாவுடீனை புதிய இராணுவத் தளபதியாக்கி இராணுவத்தை கட்டுப்பாட்டுக்குள் வைக்க நவாஸ் ஷெரீப் முயன்றாலும் நிலைமை எல்லை மீறிப் போய்விட்டது. நாட்டிலிருந்து ஏனைய இராணுவ அதிகாரிகள் ஸியாவுடீனின் ஆணைக்கு அடிபணிய மறுத்தார்கள்.

நாட்டிலே நடப்பவற்றை வானத்திலிருந்தபடியே அறிந்துகொண்ட ஜெனரல் முஷார.ஃப் தான் தரையிறங்கினால் என்ன நடக்கும் என ஊகித்துக் கொண்டாராகையால் விமானத்தைத் தரையிறக்காது சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக விமானத்தில் எரிபொருள் முடியும் வரை கராச்சி நகருக்கு மேலாக விமானத்தை சுழற்றிக் கொண்டே இருந்தார்.

ஜெனரல் முஷார.ஃபை விமானத்தோடு கைது செய்து கடத்தி வருவதற்காக தனக்கு நம்பிக்கையான விமானப்படை பைலட்டுக்களோடு ஜெட் விமானங்களை நவாஸ் ஷெரிப் சிந்து மாகாணத்தில் தயார்ப்படுத்தி வைத்திருந்தாலும் கூட முஷார.ஃபிற்கு நம்பிக்கையான இராணுவ அதிகாரிகள் இதை எப்படியோ மோந்து பிடித்து விட்டதனால் அந்த ஜெட் விமானங்களுக்கு கட்டளைகள் பிறப்பிப்பதற்கு முன்னதாகவே நவாஸ் ஷெரீ.ஃபை கைது செய்து காவலில் வைத்தார்கள்.

பாகிஸ்தானில் பிரதான பத்திரிகைக் காரியாலயங்கள். வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையம், தொலைத்தொடர்பு மையம், செல்போன் மையங்கள், இன்டர்நெட் மையம், விமான நிலையம், துறைமுகங்கள் என எல்லாமே மின்னல் வேகத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன. தொலைக்காட்சிசேவைகள், வானொலிச் சேவைகள் அடித்து மூடப்பட்டன. ஒரு சில மணி நேரமாக பாகிஸ்தானில் என்னதான் நடக்கிறது என்பதை அந்நாட்டு மக்களால் தீர்மானிக்க முடியவில்லை.

நவாஸ் ஷெரீபின் குடும்ப அங்கத்தவர்கள் நண்பர்கள், ஆதரவாளர்கள், நெருக்கமான அரசாங்க அதிகாரிகள் சகலரும் சுற்றி வளைக்கப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

இவையனைத்தும் நடந்து கொண்டிருக்கும்போது இம்முழு இராணுவப் புரட்சியையும் வானத்தில் பறந்த வண்ணமே நடத்தி முடித்த ஜெனரல் முஷார.ஃப் கராச்சி மீது பறந்து கொண்டிருந்த விமானத்தில் எரிபொருள் முடிவடைவதை அவதானித்தார். இறுதியாக சரியாக மாலை 6.30 மணிக்கு முஷார.ஃப் வெற்றி நாயகனாக தரையிறங்கினார்.

சாரியாக இரவு பத்தேகால் மணிக்கு திடீரென பாகிஸ்தானிய தொலைக்காட்சி, வானொலி சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சமிஞ்ஞைகள் (சிக்னல்) தெரிந்தன. பிரதம மந்திரி நவாஸ் ஷெரீப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக முதல் அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதன் பின் "கலவரமான 200 நிமிடங்களை





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஐயூப் கான்

வானத்தில் கழித்து தரையிறங்கிய ஜெனரல் முஷாரஃப் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்" என்ற செய்தி ஒலி, ஒளிபரப்பப் பட்டன.

13ம் திகதி காலை, அமைதியாக பாகிஸ்தானில் பொழுது புலர்ந்தது. ஒரு துளி இரத்தமேனும் சிந்தாமல் இராணுவப் புரட்சி மூலம் அதிகாரம் கைமாறியதைக் கண்டு முழு உலகமும் வாய்பிளந்து நின்றது.

ஆனால் பாகிஸ்தானிய மக்களுக்கும் பாகிஸ்தானிய இராணுவத்திற்கும் இது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. பாகிஸ்தான் இதுபோல் எத்தனையோ இராணுவப் புரட்சிகளைக் கண்டுவிட்டது. பாகிஸ்தானிய இராணுவத்தினரும் சதிப் புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வல்லவர்கள். எதை எப்படிச் எப்படி செய்ய வேண்டும் என்பதை அவர்கள் அனுபவத்தின் மூலமே அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே புரட்சி என்பது கச்சான் கடலை சாப்பிட்டுவிட்டு கோது வீசுவது போல் அவர்களுக்கு இலகுவானது என்கிறார் பாகிஸ்தானில் இருக்கும் ஒரு அரசியல் அவதானி.

1958ல் பதவியில் இருந்த பிரதம மந்திரி **லியாகத் அலி கான்** என்பவர் திடீரென படுகொலை செய்யப்பட்டார். அப்போதிருந்த இராணுவக் கமாண்டர் ஜெனரல் **முஹம்மட் ஐயூப் கான்** புரட்சி மூலம் பதவியைக் கைப்பற்றி இராணுவச் சட்டத்தை பிறப்பித்தார். அத்துடன் பிரதமர் பதவியை அதிகாரமிழக்கச் செய்து ஜனபதி பதவியை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தார்.

ஐயூப் கானின் கடும் போக்கான ஆட்சியினால் நாடு பூராவும் மிக மோசமான கொதிப்பு நிலை காணப்பட்டதால் அவர் பதவி துறக்கும் நிலைக்குத் தள்ளப் பட்டார். தனக்கு மிக நம்பிக்கையான அடுத்த இராணுவக் கமாண்டர் **யஹியா கான்** அவர்களிடம் பதவியை ஒப்படைத்தார். ஆனால் 1972 வரையே யஹியா கானினால் பாகிஸ்தானை ஆள முடிந்தது. கிழக்குப் பாகிஸ்தான் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் உருவானதால் யஹியா கான் பதவி துறக்க நேரிட்டது.

தற்காலிகமாக ஏற்பட்ட ஜனநாயக சூழலில் **சுல்பிகார் அலி பூட்டோ** புதிய ஜனாதிபதியாகப்




யஹியா கான்

பதவியேற்றார். ஆனால் 1977ல் அவர் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானபோது எதிர்க் கட்சியினால் நாடெங்கும் பாரிய குழப்ப நிலை ஏற்படுத்தப்பட்டது. இக்குழப்ப நிலையைப் பாவித்து பதவியிலிருந்த இராணுவ கமாண்டர் **முஹம்மட் ஸியாவுல் ஹக்** அதிகாரத்தைக் கைப்பற்றினார். அவரது ஆட்சி 1988ல் அவரின் விபத்து மரணத்தோடு முடிவடைந்தது. ஜெனரல் ஸியா - உல் - ஹக் பாகிஸ்தான் விமானத்தில் பாகிஸ்தானுக்குள்ளேயே கராச்சிக்குப் பயணம் செய்யும்போது மாம்பழங்கள் கொண்ட பார்சல்களுக்குள் வைத்திருந்த வெடிகுண்டு வெடித்ததனால் கொல்லப்பட்டார். அதன் பின் மீண்டும் தேர்தல்கள் மூலம் பாகிஸ்தானில் அரசுகள் பதவிக்கு வந்தன.

முன்னாள் ஜனாதிபதி அலி பூட்டோவின் மகள் **பெனாஸிர் பூட்டோ** அவர்கள், இப்போது பதவி கவிழ்க்கப்பட்ட நவாஸ் ஷெரீஃப் போன்றோர் எல்லாம் தேர்தலில் பதவிக்கு வந்தவர்கள்தான். பெனாஸிர் பூட்டோ மீது நவாஸ் ஷெரீப் ஊழல் வழக்குகளைத் தொடுத்திருந்ததால் பெனாஸிர் பூட்டோ இப்போது லண்டனில் தங்கியிருக்கிறார். இராணுவ சதிப் புரட்சிக்கு பெனாசிர் கண்டனம் தெரிவித்திருந்தாலும் இந்நிலைமைக்கு நவாஸ் ஷெரீபின் மோசமான ஆட்சி முறையே காரணம் என அவர் குற்றஞ்சாட்டி இருக்கிறார். சில வேளை ஜெனரல் முஷாரஃப் பதவியை தன்னிடம் ஒப்படைக்கலாம் என்று பெனாஸிர் ஊகிக்கலாம்.

உண்மையில் நவாஸ் ஷெரீப் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் கடந்த இரண்டு வருட காலமாக தன்னைச் சூழ சகல அதிகாரங்களையும் குவிக்க ஆரம்பித்தார். 1997ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கொழுத்த பெரும்பான்மையோடு ஷெரிப் பதவிக்கு வந்தார். சில மாதங்களிலேயே, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபயை நீதிமன்றம் பதவியிலிருந்து இறக்க முடியாது என அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வந்தார்.

தன் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் சொல்ல முடியாத ஷெரீப் பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்தார். அதனைத் தொடர்ந்து இராணுவத்தோடு ஷெரீப் மோதினார். அந்த மோதலில் பாகிஸ்தானிய



அலி பூட்டோ

இராணுவத் தளபதி ஜெனரல் **ஜஹங்கீர் கராமத்** என்பவர் தானே முன்வந்து பதவி துறந்தார். அதன் பின் அவசர அவசரமாக நவாஸ் ஷெரீப் அடுத்தடுத்து தளபதிகளாக வரவிருந்த இரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்குக் கீழாக இருந்த முஷாரஃப் அவர்களை இராணுவத் தளபதியாக பதவியுயர்த்தினார்.

இதனால் ஷெரீப் இரண்டு விடயங்களை எதிர்பார்த்தார். ஒன்று முஷாரஃப் தனக்கு நம்பிக்கையாகப் பணியாற்றுவார், இரண்டாவது அவர் திடீரென தகாத முறையில் பதவியுயர்த்தப்பட்டதால் இராணுவத்துள் அவருக்கு பெருத்த செல்வாக்கு இருக்காது, அவரால் சதிப் புரட்சிகளை மேற்கொள்ள முடியாது என்பதாகும். ஆனாலும் ஷெரீபினால் புரிந்து கொள்ள முடியாமற் போனது என்னவென்றால் யுத்தம், இராணுவத்தின் கௌரவம் என்றெல்லாம் வந்த பின் பாகிஸ்தான் இராணுவம் எப்படிச் செயற்படும் என்பதுதான்.

எப்படியோ இப்போது பாகிஸ்தானின் ஆட்சி இராணுவத்தின் கையில். சட்டத்தையும் ஒழுங்கையும் கட்டிக் காப்பதில் இராணுவம் வெற்றி காணலாம்.

ஆனால் ஒரு இராணுவ ஆட்சிக்கு எதிராக உலக நாடுகள் குறிப்பாக ஐரோப்பா அமெரிக்கா நாடுகள் மேற்கொள்ளப் போகும் பொருளாதாரத் தடைகளை எப்படி முஷாரஃப் முகம் கொடுக்கப் போகிறார் என்பதுதான் பாரிய கேள்வி.

இருந்தாலும் நீண்ட காலத்திற்கு பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நிலைத்திருக்கக் கூடிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லையென்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது. ஆனால் பாகிஸ்தானிய மக்களின் மனோ நிலையைப் புரிந்து கொள்வது அவ்வளவு இலகுவானதல்ல. புதிதாக வந்திருக்கும் இந்திய பி.ஜே.பி. அரசு பாகிஸ்தான் தொடர்பாக எடுக்கின்ற நடவடிக்கைகளால் பாகிஸ்தானியரின் ரோச நரம்புகள் சீண்டிவிடப்பட்டால் இந்தியாவுக்கு பதிலடி கொடுப்பதற்காக பாகிஸ்தானிய மக்கள் ஜெனரல் முஷாரஃபையே தம் மானத்தைக் காக்கும் தலைவனாக ஏற்றுக்கொள்ளும் கண்மூடித்தனமான நிலைமைக்குப் போகலாம். யார் கண்டார்கள்!

– கா. கீதாஞ்சலி



ஸியா உல் - ஹக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஊன்று கோலால் உணரும் உலகு



உயிர்களின் பிறப்பை இறைவனே தீர்மானிக்கிறார் என்பது ஓர் ஆன்மீக ரீதியான நம்பிக்கையாகும். ஒவ்வொரு ஜீவராசியும் இவ் உலகில் ஜனனித்து இப்படித்தான் வாழ வேண்டும் என்பதையும் அவர் முன்பே முடிவாக்கி இருக்கிறார் என்பதந்த நம்பிக்கை.

மனித ஜனனிப்பும் இவ்வகையில் அடங்கும். பிறக்கும் போது யாவருமே அங்கவியல் ரீதியில் பூரணத்துவமுள்ளவர்களாகப் பிறந்து விடுவதில்லை. வலுவிழப்பு என்பது பிறக்கும் போதே சிலருடன் ஒட்டிக் கொள்கிறது. வேறுசிலர் வந்து பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கையில் வலு இழப்புக்கு உள்ளாகிறார்கள்.

வலுவிழப்பு என்பது பல்வேறு வகைப்பட்டதாகஇருக்கலாம்.கை, கால் பாதிப்போ, செவிப்புல, விழிப்புலஇழப்போஅல்லதுமனோநிலை பாதிப்பாகவோ இருக்கலாம். இவ்வகையான பாதிப்புடையவர்களும் இச் சமூகத்தில் தம் வாழ்க்கைப் பயணத்தை தொடரத்தான் வேண்டியுள்ளது.

இவ்வகையில் விழிப்புல வலுவிழந்தவர்களும் இங்கே வாழ்கிறார்கள். அவர்களுக்கு அனுசரணையாக பல்வேறுபட்ட காரணிகள் துணை நிற்கின்றன. அவற்றைத் துணை கொண்டு தம் வாழ்வில் முன்னேற்றமடைய அவர்களால் முடிகிறது.

முன்னைய நிலையை விட தற்போதுள்ள விழிப்புல வலுவிழந்தோரின் நிலை மேம்பட்டுள்ளது என்பது வெளிப்படை. இவர்களோடு தொடர்புபட்ட பிரத்தியேகமான பல விடயங்களை சமூகம் ஓரளவு அறியத் தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இவ்வகையில் அவர்கள் கையாண்டு வருகின்ற வெள்ளைப் பிரம்பு பற்றி சில கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

Royal National Institute for the Blind

RNIB

challenging blindness

வெள்ளைப் பிரம்பு என்பது பார்வைக் குறைபாடுஉடையோரின் ஓர் அடையாளச் சின்னம். இப்பிரம்பில் அதீத சக்தியோ, தன்னிச்சையான செயல்திறனோ இல்லை. இதைத் தாங்கி வருகின்ற நபர் விழிப்புலன் அற்றவர் என்ற அறிதலை ஏனையோரிடத்தே ஏற்படுத்தத் துணை செய்கின்றது.

விழிப்புலனற்றவர்களுக்கு உதவும் சேவை மனப்பாங்கை சமூகத்தில் வளர்க்கவும் அவர்களுக்கு உதவவும், சர்வதேசரீதியில் ஒக்ரோபர் 15ம் திகதி வெள்ளைப் பிரம்புத் தினமாக கொண்டாடப்படுகின்றது.

வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் **லயன் ஜோர்ஜ் பென்ஹாம்** ஆவார். இவர் 1930ம் ஆண்டு அமெரிக்க கரிகோனா மாநிலத்தில் அரிமாக் கழக தலைவராக இருந்தபோது வெள்ளைப் பிரம்பை விழிப்புலனற்றோர் சின்னமாக அறிமுகம் செய்தார்.

சாதாரண முதியவர்கள் உபயோகிக்கின்ற கைத்தடியை விட (ஊன்றுகோல்), விழிப்புலனற்றோர் பாவிப்பது வேறுபட்டிருப்பது சிறப்புக்குரியது என கருதிய இவர் வெண்ணிற கோலின் அடிப்பாகத்தை சிவப்பு வர்ணத்தால் இணைத்து இப்பிரம்பை அறிமுகம் செய்தார். இதன் பின்னர் இத்தகைய பிரம்பை தாங்கி வருபவர் விழிப்புல வலுவிழந்தவர் என்பதை ஏனையோர் இனங்கண்டு கொள்ள இலகுவாக இருந்தது.

வெள்ளைப் பிரம்பைத் தாங்கி வருபவர் விழிப்புல வலுவிழந்தவர் என்று அறிந்தால் மட்டும் போதாது அவர் வீதியில் பயணிக்கும் போது தடைகள் ஏற்படுத்துவதை தவிர்ப்பதன் ஊடாகவோ, வாகனச் சாரதிகள் அவர்களை கவனித்து அவர்களுக்கு அனுசரணையாக நடப்பதன் மூலமாகவோ உதவலாம். தெருக்களை அவர்கள் கடக்கும் போது உதவி செய்யலாம். பொதுப் போக்குவரத்து சாதனங்களில் பயணிக்கும் போது அவர்கள் செல்ல விரும்பும் இடத்துக்கு செல்ல உதவலாம். பாடசாலை, சமூக மட்டத்தில் வெள்ளைப் பிரம்பைக் கௌரவிக்கும் போதனையை ஊட்டலாம்.

இப்பிரம்புபற்றியபூரண அறிவை சமூகத்தில் அனைத்துத் தரப்பினரும் அறிந்திருப்பது பொருத்தமானதாகும். அதுமட்டுமன்றி வலுவிழப்பு ஏற்பட்டுவிட்டதே என்பதற்காக அத்தகையோரை சமுதாயத்தில் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பதும், தாம் வேறு, சமூகம் வேறு என்ற தன்மையை அறிந்தோ அறியாமலோ அவர்கள் மனதில் ஊட்டுவதும் தவறாகும்.

இத்தகைய மன எண்ணம் தோற்றம் பெறுமாயின் அவர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு மனோநிலையும் தளர்வுறும். இத்தகைய பாதிப்புகள் அவர்கள் மனதில் எழாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது பொறுப்பு மிக்க சமூகப் பிரஜை ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையாகும்.

**- கனகலிங்கம் தர்மசேகரம்**
**முகமாலை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# புத்திஜீவிகள்

துரை சுப்பிரமணியன்

அப்பு அன்று காலையே அடுத்த நாள் கூட்டத்திற்கு தயாராகிவிடுவதற்காக, தனது வேட்டி, சால்வையை நீலம் போட்டு வெள்ளையாகத் தோய்த்துவைத்தார். அடுத்தநாள் விடிய கூட்டத்திற்குப் போவதற்கு முன்பு முகச்சவரம் செய்வதற்காக ஒரு பிளேட்டையும் வாங்கி வந்து வைத்தார்.

“வெங்காய உற்பத்தியும், உற்பத்தி செய்த வெங்காயத்தைக் கொழும்புக்கு அனுப்புதலும்”

இதுதானாம் நாளைய கூட்டத்திலை அரசாங்க அதிபர் அவர்களும் கொழும்பிலை இருந்து வந்த பெரிய அதிகாரியும் பேசப்போற விடயமென்று அப்பு சொன்னார்.

அடுத்த நாள் காலை செக்கலோடு எழும்பிய அப்பு, முகச்சவரம் செய்து கொண்டு, குளித்த பின் அடுத்த தோட்டத்துச் சொந்தக்காரனாகிய சின்னத்துரையையும் ஒன்பதுமணிபோல கூட்டத்திற்குப் போக வரச் சொல்லிவிட்டு, வந்து கோப்பியைக் குடித்தார்.

சரியாக ஒன்பது மணி போல அப்பு தனது தோய்த்து நீலம் போட்ட வேட்டியை கட்டி தோளில் சால்வையையும் போட்டுக் கொண்டு சின்னத்துரையையும் கூட்டிக் கொண்டு மகாவித்தியாலய வளவிற்குப் போனார்.

கூட்டம் சரியாக பத்து மணிக்கு ஆரம்பமானது.

வெங்காயச் செய்கை பற்றி கொழும்பிலிருந்து வந்த அதிகாரி என்ன சொல்லப் போறார் என்று அறிய அப்பு மிகவும் ஆவலாக இருந்தார்.

முதலில் அரசாங்க அதிபர்தான் எழுந்து நின்று தனது கண்ணாடியை துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். மாலை அணிவிக்கப்பட்டது. கைதட்டல்கள் மண்டபத்தை அதிரவைத்தன.

“விவசாயிகளாகிய நீங்கள் படும் கஷ்டம் நான் அறியாததல்ல. நீங்கள் சேற்றில் கால் பதித்தால் தான் நாங்கள் சோற்றுக்குள் கை வைக்க முடியும். உங்களின் பெறுமதியை இந்த நாடும் நாமும் அறிவோம்....

இங்கிருந்து உங்கள் உற்பத்திப் பொருளான வெங்காயத்தைக் கப்பலில் அனுப்பிவைக்க நானும் கொழும்பிலிருந்து வந்திருக்கும் அதிகாரி அவர்களும் கட்டாயம் நடவடிக்கை எடுப்போம். உங்களது நீண்ட நாள் கனவு வெகு விரைவில் நனவாகும் என்று உறுதி கூறிக் கொண்டு கொழும்பிலிருந்து வந்த அதிகாரி அவர்களையும் இங்கு பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்...

அரசியல்வாதிகள் பாணியில் தமிழில் ஒரு “வணக்கம்” சொல்லிவிட்டு அந்த அதிகாரி சிங்களத்தில் பேசினார். அவருக்குப் பல தோட்டக்காரர்கள் மாலை போட்டு அவரின் கைகளையும் பிடித்துக் கொஞ்சினார்கள்.

“நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல் நாம் உங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அரசஅதிபர் அவர்கள் சொன்னது போல இம் மாகாணத்து விவசாயிகளின் கடும் உழைப்பையும் பெறுமதியையும் நாம் நன்கு அறிவோம்.

இம்முறை நீங்கள் வேண்டிய அளவு வெங்காயத்தைப் பயிரிடுங்கள். அவ்வளவு வெங்காயத்தையும் கொழும்பிற்குக் கப்பல் மூலம் அனுப்பி வைக்க நாம் கட்டாயம் நடவடிக்கை எடுப்போமென்று இம்மேடையில் நான் உறுதிஅளிக்கின்றேன்....”

என்று அந்த அதிகாரி சொன்னபோது கரகோஷம் அடங்க சில நிமிடம் எடுத்தது.

“எமக்கெல்லாம் விடிவு காலம் வரத்தான் போகுது” என்றாற் போல அங்கிருந்த தோட்டக்காரர்களுக்கெல்லாம் மனம் குளிர்ந்தது. “...ச்சா... இவரல்லவோ அதிகாரி” என்பது போல ஆட்களை ஆட்கள் பார்த்துக் கொண்டார்கள். அவர்களின் முகமும் அகமும் மலர்ந்திருந்தன.

“உங்களுக்குள்ள பிரச்சினைகளைச்சொல்லவேண்டுமென்றால் இந்த மேடையில் மனம் திறந்து சொல்லலாம்” என்று அந்த அதிகாரி சொல்லிவிட்டு அரசாங்க அதிபரை ஒரு தடவை பார்த்துக் கொண்டார். ஆமோதிப்பது போல் அரசாங்க அதிபரும் தலையை ஆட்டினார்.

“எங்களுக்கு உரம் வேண்டும்”

“எங்களுக்கு குறைந்த வட்டியிலும் நீண்ட தவணை முறையிலும் கடன் வேணும்”

இன்னும் எத்தனை எத்தனையோ எல்லாம் தோட்டக்காரர்கள் விழுந்தடித்துக்கொண்டு மேடை ஏறிச் சொன்னார்கள்.

00 00 00

அப்பு கூட்டம் முடிந்து வரும் பொழுதுஇரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. அம்மா அப்பு வரும்வரை சாப்பிடாமல் காத்துக்கொண்டிருந்தாள்.

அப்பு அன்று முழுவதும் சந்தோஷமாக இருந்தார். கொழும்பு அதிகாரியும் அரசாங்க அதிபரும் சொன்னதை எல்லாம் மீண்டும் மீண்டும் அம்மாவுக்குச் சொல்லி சந்தோசப்பட்டார். இந்தமுறை எப்படியும் நூறு அந்தர் வெங்காயமாவது கப்பலில் கொழும்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சொன்னார்.


அம்மாவின் தாலிக் கொடியை அடகு வைத்துத்தான் இந்த முறை வெங்காயச் செய்கையில் இறங்கினார் அப்பு.

அப்பு நினைத்ததைப் போல வெங்காயமும் இந்த முறை நல்ல விளைச்சல்தான். எல்லோருக்குமே நல்ல சந்தோஷம்.

எப்படியும் இந்த முறை வெங்காயத்திலை நல்ல இலாபம் வரும் என்று எல்லோரும் நம்பி இருந்தோம். நாம் எல்லோருமே அப்புவிற்கு உதவி செய்தோம். வீடு நிரம்பிய வெங்காயத்தைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

அப்பு சொன்னது போல, கொழும்பிலிருந்து வந்த அதிகாரியும் அரச அதிபரும் கூட்டத்தில் பேசியது, தோட்டக்காரர் ஒருவர் அந்த இருவருக்கும் மாலை போட்டதும் அடுத்த நாட் பேப்பரில் வந்தது. அப்பு அந்தப் பேப்பரை வாங்கி வாசித்து, சின்னத்துரைக்கும் வாசித்துக் காட்டிவிட்டு வெகு பக்குவமாகவும் பாதுகாப்பாகவும் பேப்பரை தனது ரங்குப் பெட்டியில் வைத்துக் கொண்டார்.

வெங்காயம் பிடி பிடியாய் கட்டி வீட்டுக்குள் பக்குவமாகக் கட்டித் தூக்கிவிடப்பட்டிருந்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்பு இப்போது அடிக்கடி மணியகாரன் கந்தோருக்கும், அரசாங்க அதிபர் கந்தோருக்கும் விதானையாரிடமும் போய் வந்தார்.

அப்புவின் முகத்தில் முந்திய சந்தோசம் இல்லை. இருப்பினும், உற்சாகமாகத்தான் காணப்பட்டார்.

அப்பு ஒவ்வொரு தடவையும் கச்சேரிக்குப் போய் வந்துவிட்டு, "எப்படியும் அடுத்த கப்பலுக்கு அனுப்பி வைப்பதாக அரசாங்க அதிபர் உறுதி கூறுகிறார்" என்று சொல்லுவார்.

00 00 00 00

வீடு வேய்ச்சல் முறையும் வந்தது. அப்புவின் கையில் கிடுகு வாங்கக் கூட காசு இருக்கவில்லை. வீட்டை அண்ணாந்துபார்த்துவிட்டு பெருமூச்சு விடுவார் அப்பு.

மழை வருவது போல மேகம் கருக் கூட்டினால் அப்புவின் முகமும் அம்மாவின் முகமும் கூடக் கறுத்துச் சோர்ந்து போய்விடும்.

வெங்காயத்தைக் கப்பலில் ஏற்றும் வரை மழை வரக்கூடாது என்று அம்மா எல்லாக் கோயில்களுக்கும் நேர்த்திக் கடன் வைத்தாள். அருகிலுள்ள வைரவருக்கு வடை மாலை சார்த்துவதாகவும் வாக்களித்தாள்.

அம்மாவின் கையில் ஒரு சோடி காப்பு மட்டும் மிகுதியாக இருந்தது. அதில் ஒரு காப்பை விற்றுப் போட்டு வீடு வேயலாம் என்று அம்மா சொன்னபொழுது அப்புவுக்கு மனமில்லாமல் இருந்தது. பார்த்துச் செய்யலாமென அப்பு சொன்னார். ஆனால் அன்று இரவே மழை இடி முழக்கத்தோடு வந்தது.

அப்பு பழங் கிடுகுகளை எடுத்து கூரையில் கிடுகுகள் உக்கிப்போன இடங்களுக்கு எறிந்து ஒழுக்கை ஓரளவாவது கட்டுப்படுத்த முயன்றார். அம்மாவும் நானும் ஓடி ஓடி கிடுகுகளை எடுத்து வந்து அப்புவிடம் கொடுத்தோம். மழைத் துமியில் நனைந்ததால் எனக்கு தலையிடி காய்ச்சலும் வந்தது.

எங்களின் பிரார்த்தனைகள் அத்தனையும் வீணாகிப் போயின. "கண் கெட்ட கடவுள் எங்களுக்குத்தான் இந்தச் சோதனையை விடுகுது" - அம்மா மனம் நொந்து கொண்டாள்.

காற்றோடு மழை மிக வேகமாய் பெய்ததால் வெங்காயப் பிடிகள் எல்லாமே நனைந்துவிட்டன. இரண்டொரு தினங்களில் எல்லா வெங்காயப் பிடிகளுமே அழுகி மணக்கத் தொடங்கின.




இனி வெங்காயத்தை கொழும்பிற்கு அனுப்பவே முடியாது. அப்பு விதானையாரைக் கூட்டி வந்து வெங்காயத்தைக் காட்டினார்.

நிலைமைகளை விளக்கி தனக்கூடாக அரச அதிபருக்கு ஒரு கடிதம் எழுதித் தரும்படியும் தான் நஷ்ட ஈட்டுக்குச் சிபாரிசு செய்வதாகவும் அவர் சொன்னார்.

நட்ட ஈட்டுக்கான மனுவை எழுதிக்கொண்டு விதானையாரிடம் இரண்டு மூன்று நாள் திரிந்து கையெழுத்து வாங்கிக் கொண்டு அரச அதிபரைச் சந்திக்கச் சென்றார் அப்பு. முக்கிய வேலையாக தான் கொழும்பிற்குப் போவதாகவும் பத்து நாள் கழித்து வரும்படியும் சொல்லி அனுப்பினாராம் அரச அதிபர்.

அப்புவிற்கு இப்பொழுது மனம் நன்றாகத் தளர்ந்து விட்டது.

பத்து நாள் கழித்து அப்பு கச்சேரிக்குப் போனார். அப்பு கச்சேரிக்கு அரச அதிபரைக் காணச் சென்ற பொழுது யாரோ பாராளுமன்ற உறுப்பினரும் அரச அதிபரோடு கதைத்துக் கொண்டிருந்தாராம்.

அடுத்த முறை அரச அதிபர் கொழும்பிற்கு போகும் பொழுது, அப்புவும் கொழும்பிற்கு வந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கதைத்து உழவு யந்திரமொன்று வட்டி குறைந்த கடன் அடிப்படையில் வாங்குவதற்கு உதவி செய்யலாமென்று இருவரும் சொன்னார்களாம்.

படித்தவர்கள் ஏமாற்ற மாட்டார்கள் என்று இன்னமும் நம்பிய அப்பு, அம்மாவிடம் மிகுதியாக இருந்த காப்பு இரண்டையும் விற்று, வீடு வேயாமலே அந்தக் காசைக் கொண்டு கொழும்பிற்குப் புறப்பட்டுப் போனார்.

தனது விடயத்தைப் பற்றிக் கதைத்த பொழுது இருவரும் நன்றாக வாய்விட்டுச் சிரித்தார்களாம். அப்பு சொன்னார்.

புண்ணின் வலியும் கொதிப்பும் அப்புவுக்குத்தானே தெரியும். அவரால் வாய்விட்டுச் சிரிக்க முடியுமா? நட்டம் அப்புவிற்குத் தானே. அதிகாரிகளின் "பட்டா" விற்கு நட்டம் வரப்போவதில்லையே.

00 00 00 00

அப்பு கொழும்பிற்குப் போய் இரண்டு கிழமைகளாக கடிதம் ஒன்றும் வரவில்லை. அம்மாவும் நானும் காகிதக்காரனை கடிதத்தைப் பற்றி நெடுகக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

ஒரு மாதத்திற்குப் பின் ஒரு கடிதம் போட்டிருந்தார். லொட்ஜ் ஒன்றில் பாயில்தான் படுப்பதாகவும் கையில் உள்ள பணத்தை மிகவும் கவனமாகத்தான் செலவு செய்வதாகவும் எழுதியிருந்தார்.

மேலும் அரசாங்க அதிபர், தான் எல்லா விசயங்களையும் எம்.பி. யிடம் கூறியுள்ளதாகவும் அவர் வங்கியில கடன் பெற உதவி செய்வாரென்றும் கடனைப் பெற்றுவிட்டால் உழவு யந்திரத்தை வாங்கி கப்பலில் போட்டுவிட்டு தான் உடனடியாக வந்துவிடுவதாகவும் எழுதியிருந்தார்.

கடிதத்தை வாசிக்க எனக்கு நல்ல சந்தோசமாக இருந்தது.

"எங்களுக்கு உழவு யந்திரம் கப்பலில் வரும்" என்று எனது சிநேகிதர்களுக்கெல்லாம் சொன்னேன். அவங்களும் அடிக்கடி "கப்பல் எப்ப வரும்? உழவு யந்திரம் எப்ப வரும்?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அப்பு வரும்வரை பள்ளிக்கூடத்துக்குப் போவதையும் அவர்களோடு கதைப்பதையும் இயன்றவரை தவிர்த்துக் கொண்டேன்.

00 00 00 00

அப்பு திடீரென்று ஒரு நாள் சாயந்திரம் வந்து இறங்கினார்.

அம்மாவையும் என்னையும் கண்டதும் அப்புவிற்கு சொண்டுகள் துடித்து விம்மலோடு அழுகை வந்தது. அப்பு அழுததைப் பார்க்க எங்களுக்கும் அழுகை வந்தது.

"ஏமாற்றிப் போட்டாங்கள்.... புத்தியாய் நழுவிப் போட்டாங்கள்..." என்று விம்மல் அழுகைக்கிடையே சொன்னார். கடன் தாறதெண்டால் பொறுப்பு வேணுமாம்....

கிடக்கிற ஐந்து பரப்புக் காணியும் வீடும் பலாலியில்தான் இருக்கெண்டும் அதை வேணுமெண்டால் எழுதித் தரலாம் என்றும் தான் சொன்ன பொழுது அதை ஏற்றுக் கொள்ள முடியாதென்று சொன்னாங்களாம்.

அடுத்த நாட் காலை அப்பு ஆத்திரமும் ஆவேசமும் கொண்டவராகக் காணப்பட்டார். "நான் நட்ட ஈடு பெற்றே தீருவேன். இவங்களை கோட்டிலே ஏத்தியே தீருவேன்" என்று அப்பு, தான் றங்குப் பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த அந்தப் பேப்பரையும் கொண்டு புறப்பட்டார்.

அப்பு நேராக அப்புக்காத்து கந்தசாமியார் வீட்டுக்குத்தான் போய்க் கொண்டிருந்தார். தாக்கப்பட்ட ஆவேசங்கொண்ட வேங்கையின் சாயல் அவரில் இருந்ததைக் கண்டேன். அப்பு கட்டாயம் வெல்லுவார் எண்டு எனக்குத் தெரியும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆ...! இயற்கை தந்த ஜில்...!

## *King Coconut!*

அது செவ்விளநீர்!

சாதாரண இளநீரும் தேங்காயோடு ஒப்பிடுகின்ற போது King தான்.

தென்னம் பூ பழமாக மாறி சுவை தரும். அதன் இனிய தண்ணீர் பல விதத்திலும் எமக்கு ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் தரும்.

இயற்கையின் அற்புத படைப்புகளில் ஒன்றுதான் இளநீரும்.

கொலரா, காய்ச்சல், வாந்திபேதி போன்றவற்றுக்கு நீராகாரமாய் மருத்துவர்கள் சிபார்சு செய்யும் இவ்விளநீரில் காபோவைதரேற்று, சிறிதளவு புரோட்டின், கொழுப்பு, விட்டமின் சி, கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் இரும்பு போன்ற தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன.

அதிகாலையில் தேநீர் குடிப்பதற்குப் பதிலாக இளநீர் அருந்துவது உடம்பின் சூட்டைக் குறைக்க பெருமளவில் உதவும்.

கொழும்பு நகரில் பஸ் தரிப்பிடங்கள் தோறும் சிறு வண்டிகளை வைத்துக் கொண்டு இளநீர் விற்கும் வியாபாரிகளைக் கண்டிருப்போம்.

கொழும்புக்குக் கொண்டு வரப்படும் பல்லாயிரக்கணக்கான இளநீர் எந்த விளம்பரமுமின்றி ஒரே நாளில் விற்றுத் தீர்கின்றன.

கொழும்பின் சுற்றுப்புறத்தில் அநேகமாக இளநீர் விற்கும் இடங்களில் தோட்டப்புற தமிழ் இளைஞர்கள் கூலிக்கு வேலை செய்கிறார்கள். அத்தோடு சிங்கள, முஸ்லிம்களும் வேலை செய்கிறார்கள்.

சிலர் சொந்தமாகவே தொழிலைச் செய்கிறார்கள். சில முதலாளிமார் பலரைக் கூலிக்கு அமர்த்தியும் இவ் வியாபாரத்தைச் செய்கின்றனர்.

வசந்தன் என்ற இளைஞன் எங்களோடு சிங்களத்திலேயே கதைத்தான். 25 வயதுடைய அவன் வீட்டை விட்டு வந்து ஏழு வருடங்களாகின்றனவாம். ஒரு சின்னத் தகராறில் வீட்டை விட்டு வந்த நான் பலவேறு தொழில்களையும் செய்துவிட்டு கடைசியில் இளநீர் வெட்டும் தொழிலில் சேர்ந்தேன். வேறு தொழில் சரியாக அமையாததினாலேயே இதனைத் தெரிந்தெடுத்தேன். ஏனைய இளைஞர்களைப் போன்று அழகாக உடுத்தி அலங்கரித்திருக்க எனக்கும் ஆசைதான். ஆனால் எனக்குக் கிடைக்கும் வருமானம் போதவில்லையே. வாழ்க்கை எந்நாளும் இந்தக் கோலத்திலேயே கழிகிறது என்றான். அழுக்கு சேட்... தொடர்ச்சியாக அதையே துவைத்து துவைத்து உடுத்திருப்பது தெரிந்தது.

சரியாக காலை ஆறரை ஏழுக்கு எமது வியாபாரம் ஆரம்பித்துவிடும். மாலை 7.00 மணியளவில் நிறைவுறும்.

எங்களுக்கு மேலதிகப் படியொன்றும் வழங்கப்படுவதில்லை. மண்டை உருகும் வெயிலில் காய வேண்டும். மழை காலங்களில் தெப்பமாய் நனைய வேண்டும்.

வெயிலின் கொடுமைக்கு கொஞ்சம் குளிராக நம்மிடமிருக்கும் இளநீரில் ஒன்றை வெட்டிக் குடிக்கவும் எங்களால் முடிவதில்லை. சரியாக எண்ணிக் கொடுத்த அளவிற்கு காசு கொடுக்க வேண்டும் என்றார் பாலு.

விற்பவர்களுக்கு கோடை காலங்களில்தான் கொள்ளை லாபம். மழை காலங்களில் விற்பனை மந்தமாகி விடுகிறது.

இளநீர் மரம் காய்க்கத் தொடங்கியவுடன் 2 வாரங்களுக்கொரு முறை குலை வெட்டலாம். எனவே இது எல்லாக் காலத்துக்கும் விற்பனை செய்யக்கூடியதொன்று.

நாம் வியாபாரிகளிடம் 4 - 5 ரூபா வரையில் கொடுத்து வாங்குவோம். 8 ரூபாவிற்கு விற்போம். நாங்களே சொந்தமாக ஓரிடத்தில் இருந்து இளநீர் வெட்டினால்தான் அதிக லாபம். அல்லாமல் கூலி கொடுத்துவிட்டால் எமக்கு எதுவும் மீதமில்லை என்றார் ருவண் என்பவர்.

'எங்களுக்கு ஒரு நாளைக்கு 200 ரூபா தருகின்றார்கள். அவ்வளவு தான். லீவு எடுக்க முடியாது. போயா விடுமுறை தினங்களிலும் வேலைதான்.

வருடத்துக்கொரு முறை வரும் பெருநாட் தினங்களில் வீடு போய் வருவேன். அது தவிர வீடு செல்வதும் இல்லை. இளநீர் குடிக்க வரும் பொதுமக்கள் நாங்கள் தான் இதன் சொந்தக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# நல்ல விலைக்கு வில்!

காரர்கள் என்று நினைத்து விலையைக் குறைத்துக் கேட்பார்கள். சுவையில்லாவிட்டால் ஏசுவார்கள். வீணாக காசைத் தந்துவிட்டதாகச் சொல்வார்கள்.

உள்ளே எப்படியிருக்குமென்று வெளிப் பார்வையில் எங்களாலும் சொல்ல முடியாதுதானே என்றார் சமன் என்பவர்.

சமனோடு பேசிக் கொண்டிருக்கும் போதே நம்மருகே குடித்துவிட்டு வீசிய இளநீர்க் கோம்பைகளை வெட்டி அதனுள்ளிருந்த வழுக்கையை வழித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவனை யாரென்று கேட்டேன்.

அவன் அதே தெருவில் செருப்புத் தைப்பவன். தினமும் இவனது காலையுணவு இது. அவன் மட்டுமல்ல அந்தத் தெருவில் செருப்புத் தைக்கும் பலரும் இப்படித்தான் காலையுணவை சமாளித்துக் கொள்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டோம்.

புறக்கோட்டைப் பகுதியில் தோட்டப்புற இளைஞர்களை சொற்ப ளவு கூலியில் வேலைக்கமர்த்தி லாபம் சம்பாதிக்கும் முதலாளிகளும் இருக்கிறார்கள்.

விநோத் என்ற பையனுக்கு மாதத்திற்கு 1000 ரூபாய்தான் கூலி கொடுக்கப்படுகிறது. மூன்று வேளை சாப்பாடும் தங்குமிடமும் இலவசம்.

சிறு வயதிலேயே குடும்பச் சுமையினால் ஏற்பட்ட விரக்தியில் வீட்டை விட்டுக் கிளம்பி இரண்டு வருடமாக கொழும்பில் அலைந்து திரிந்து இந்தத் தொழிலில் சேர்ந்தேன். எனது தாய், தந்தைக்குப் பாரமாய் இருக்கக்கூடாதென்றுதான் இப்படிக் கஷ்டப்படுகிறேன் என்றான் அவன்.

ஜா-எலயைச் சேர்ந்த ரோகன என்ற வாட்டசாட்டமான இளைஞன் கொழும்பு பஸ் தரிப்பிடத்தில் இளநீர் விற்பவன்.

நான் இந்தத் தொழில் செய்ய வெட்கப்படுவதில்லை. இன்று எத்தனையோ படித்த இளைஞர்கள் தொழில் வாய்ப்பின்றி அலையும் போது நாம் இதைச் செய்தால் என்ன? இருந்தாலும் இந்த வருமானம் எனது குடும்பத்தை பராமரிக்கப் போதாது. எனவே நான் இராணுவத்தில் சேரப் போகிறேன் என்றான்.

கொழும்புக்கு வரும் இளநீர் ஒல்கொட் மாவத்தையின் நடைபாதையோரங்களிலும், புகையிரத நிலைய வீதியிலும் மாலை 6.00 மணியிலிருந்து அதிகாலை 7.00 மணி வரை குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும்.

சுமார் 7-8வாகனங்களில் கொண்டு வரப்படும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான இளநீர் அடுக்கப்பட்டு விற்பனைக்கு இருப்பதைப் பார்ப்பதே ஒரு கண்கொள்ளாக் காட்சிதான்.

தூர இடங்களிலிருந்து இளநீர்க் குலைகளைக் கொண்டு வந்தவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம்.

"எங்களுக்கு இதில் அதிக இலாபமில்லை. இதை வாங்கி விற்பவர்கள்தான் அதிகமாக உழைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நாம் படும் கஷ்டம் விளங்குவதில்லை. இரண்டு மடங்கு இலாபம் வைத்து விற்கிறார்கள். வாகனக் கூலி, மரம் ஏறுபவர்களுக்குக் கூலி.... எமக்கு அன்றன்றைப் பாட்டுக்கு மட்டும்தான் வருமானம் என்றார் சாந்த என்பவர்.

இவர்கள் இளநீர்த் தோட்டங்களிலிருந்தும், வீட்டுத் தோட்டங்களிலிருந்தும் 2.50 - 3.00 ரூபா வரையில் விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

ஒரு மரத்தில் ஏறுவதற்கு கூலியாக 10 ரூபா கொடுக்க வேண்டும். கொழும்புக்கு இளநீரைக் கொண்டு வந்து சேர்க்க 1000 ரூபா வாகனக் கூலி கொடுக்க வேண்டும்.

மழை காலங்களில் இளநீர் குடிப்பது குறைவானாலும், தொடர்ந்து இளநீர் சப்ளை செய்யும் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து இளநீரை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு இருக்கிறதாம். எனவேமழைகாலங்களில் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லையென்று இதைத் தொடர்கிறோம் என்றார் சாந்த.

கோடை காலங்களில் 4 - 5 ரூபா வரை வலை கொடுத்து வாங்கி, 7 - 9 ரூபா வரையில் விற்கலாம். மழைகாலங்களில் அப்படியில்லை.

ஆனால் எப்படியோ இவர்கள் கொழும்புக்கு கொண்டு வருவதையெல்லாம் நஷ்டத்துக்காவது விற்றுவிட்டே செல்கிறார்கள். இளநீரைக் குலை வெட்டியதிலிருந்து 2 நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாதாம்.

மேலும், கீழே விழுந்து வெடிப்பது, வீச வேண்டியேற்படுவது எல்லாமே வரும் இலாபத்தில் செலவாகிறது. ஒரு நாளைக்கு மொத்த வியாபாரம் இரண்டு தடவை நடக்கிறது. இரவில் முடிந்தவுடன் திரும்ப அதிகாலை 3.00 மணி தொடக்கம் 7.00 மணி வரையில் வேறோர் இடத்தில் விற்பனை நடக்கும். இங்கும் சுமார் 12,000 இளநீர் இறக்கப்படுகிறது. இது தினம் தினம் நடக்கிறது.

கொழும்புப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சுமார் 25,000 இளநீர் விற்கப்படுகிறது.

இவ் ஆரோக்கிய மிக்க, சுவை மிகு இனிய பானத்தை பல்லாயிரக் கணக்கான மக்கள் அருந்துவதற்கு சரியான முறையில் திட்டமிட்ட முதலீட்டாளர்களும், சிறந்த தொழிலுக்கான முதலீடுகளைத் தேடிக் கொண்டிருப்பவர்களும் முயற்சிப்பார்களேயானால் இதன் விற்பனை இன்னும் பெருகும். அதுமட்டுமல்ல, பல்வேறு வகையான செயற்கைப் பானங்களை அருந்தி சிறிது நேரம் இன்பம் பெறுவதை விட சத்துள்ள இளநீரைப் பருகுவதற்கு நாமும் தயாராவோம். ●



www.tamilarangam.net



# ஒரு கவிதையும் சில ஈ·சல்களும்

வீணைக்கொடியோன்

கனடாவில் இந்த வருடம் ஏப்ரல் மாத இறுதியிலிருந்து மூன்று வாரங்கள் நகைச்சுவைக்குரிய காலமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஈழத்தில் முற்போக்கு இலக்கிய வாதியாக தன்னை அடையாளம் காட்டிக்கொண்ட திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் "உதயன்" விழாவிற்கு பாடலாசிரியர் வைரமுத்துவை அழைத்ததிலிருந்து இந்த நகைச்சவைக் காலம் ஆரம்பமாயிற்று.

"குயிலின் இழப்பிற்கு
குரலெழுப்பி அழா வண்ணம்
மண் மீது உள்ளவரின்
வாயெல்லாம் பூட்டு
வரியெல்லாம் மௌனம்
பேயுலாவும் மண்ணின்
பொழுதெப்போ விடியும்"

என ராஜினி திரணகமவின் மரணத்திற்காக எழுதிய இந்த முன்னாள் முற்போக்குவாதி "முற்போக்கை" எல்லாம் எங்கோ தொலைத்துவிட்டு வைரமுத்துவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்ததுடன் இந்த "நகைச்சுவைக்காலம்" உச்ச நிலையை அடைந்தது. இந்தநகைச்சுவைக் காலம் பற்றி முதலிலிருந்து....

மேற்கு நாடுகளில் பாரிய வியாபார நிறுவனங்கள் தமது மலிவு விலைகளை அறிவிக்கவும், புதிதாக அறிமுகப்படுத்தும் பொருட்களை விளம்பரப் படுத்தவும் பிரசுரங்களை வாரா வாரம் வெளியிடும்.

இவ்வகையான பல பிரசுரங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பொலித்தீன் பைகளில் போடப்பட்டு வாரந்தோறும் வீடுகளுக்கு விநியோகிக்கப்படுவதுண்டு.

தமிழில் இவ்வகையான விளம்பரத் தொகுப்பொன்று பிரதி வெள்ளிக்கிழமைகளில் கனடாவில் வெளிவரும். கனேடிய தமிழ்ப் பெருங்குடி மக்கள் சிலர் இதற்கு பத்திரிகை எனப் பெயரிட்டு "உதயன்" எனவும் அழைப்பார்கள்.

(68 பக்கங்களில் 5 அல்லது 6 பக்கங்களுக்கு செய்திகள் என்னும் பெயரில் சில அறிவித்தல்களைத் தருவதாலோ என்னவோ) இந்தத் தொகுப்பினை வெளியிடுவோர் ஒரே நாளில் பல ஆயிரங்களைச் சேகரிக்கும் முகமாக, கனடாவுக்கு பிரபல சினிமா பாடலாசிரியர் வைரமுத்துவை அழைக்க முடிவு செய்தனர்.

மற்றவர்களை விடவும் வைரமுத்து வருவதால் பெருத்த லாபம். வைரமுத்து தனியே வருவார். பாடகர்களென்றால் வாத்தியக் கலைஞர்கள் இத்தியாதி என அதிகம் செலவு செய்ய வேண்டும். அவ்வகை நிகழ்ச்சிகளுக்கு அதிக செலவு.

வைரமுத்துவை வைத்து ஒரு கவியரங்கு வைத்தால் உள்ளூர்க் கவிஞர்கள் என்ன பணமா கேட்கப் போகிறார்கள்? (எனினும் கனடாவில் இருக்கும் ஒரு பிரபலமான ஈழத்துக் கவிஞர் 8,000 டொலர் கேட்டதாகக் கேள்வி) வைரமுத்துவுக்கு வழங்கப்படும் 10,000 அமெரிக்க டொலர்களுடன் விடயம் முடிந்தாயிற்று.

ஏறக்குறைய 4, 5 மாதங்களுக்கு முன்பிருந்து இவ் "உதயன்" விளம்பரத் தொகுப்பு, வாரம்தோறும் வைரமுத்து வருகிறார்... பராக்... பராக்... என்ற வகையில் பக்கம் பக்கமாக விளம்பரங்களை வெளியிட்டுத் தள்ளியது.




கவியரங்கில் கவிஞர் கந்தவனம் (கனடாவின் தேசிய கீதத்தை தன் இஷ்டத்துக்கு மொழிமாற்றியதில் கனடாவின் தாகூர் என கிரீடம் சூடிக்கொண்டவர்), சிவா சின்னத்தம்பி (கிட்டு ஒரு மொட்டு பட்டு பட்டு என அவன் சுட்டதில் கட்டுக் கட்டாய் மட்டு இல்லாத சட்டு... என எழுதியதில் கனடாவின் அதிரடிக் கவிஞரானவர்), சுமதி ரூபன் (பெண்விடுதலைக்காககுரல்தரும் கவிஞர்), சக்கரவர்த்தி (நவீன சிறுகதை மரபில் ஈழத்தை அடையாளப்படுத்தும் கதைஞர்), பொன்னையா விவேகானந்தன் (வானொலி நிகழ்ச்சிகள் ஊடாக பிரபலமானவர்) ஆகியோர் கலந்து கொள்வர் என 4 மாதமாக விளம்பரஞ் செய்யப்பட்டது.

இவர்களில் சக்கரவர்த்தியை கடந்த 4, 5 வருடங்களில் எங்காவது மேடையில் கண்டதாக எனக்கு ஞாபகமில்லை. சுமதி ரூபன் இப்படியான கவியரங்குகளுக்குப் புதியவர். மற்றவர்கள் பெரும்பாலும் மேடையிலும் சில நேரத்தில் வீடுகளிலும் இருப்பவர்கள்.

இடையில் ஏதோவொரு காரணம் கூறி பொன்னையா விவேகானந்தன் விலகிக் கொள்ள கவிஞர் தொகை நான்காயிற்று.

வைரமுத்து கலந்து கொள்ளும் விழாவினை கனடாவின் 20 தமிழ் வணிக நிறுவனங்கள் ஸ்பொன்சர் செய்தன. (ஒவ்வொருவரும் 1000 டொலர் வீதம் வழங்கியதாகத் தகவல்)

இதைத் தவிரவும் மண்டபம், இருக்கைகள், மாலை, மேள வாத்தியங்கள் அது இதுவென ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஸ்பொன்சர்கள் பெறப்பட்டன.

வைரமுத்து வருவதற்கு முன் வாரக்கணக்கில் பெரும் மனிதன், புனிதன் என்கிற வகையில் கட்டுரைகள் எழுந்தமானத்திற்கு எழுதித் தள்ளப்பட்டன.

வைரமுத்து ரொறொன்ரோ மண்ணில் கால் வைக்கவும் வேடிக்கை இன்னமும் அதிகமாயிற்று.

விமான நிலையத்திலிருந்து நேரடி ஒலிபரப்பு, விமான நிலையத்திலிருந்து கனேடிய தமிழ் மக்களுக்கு வைரமுத்து செய்திவழங்குவார் என ஒரே அமர்க்களம்.

பாரதிதாசனின் "வீரம்கொள் தமிழர்" கூட்டம் கவிதையை வைரமுத்து அங்கு மாற்றி, இங்கு கழித்து, "திரண்டு வருக" என விமான நிலையத்திலிருந்து எழுதி முடிக்க, அது வேறு விளம்பரத் தொகுப்புக்களின் முன் பக்கமாக நிறைந்து கிடந்தது.

உதயன் விழா மே மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. (இரண்டு தினங்களும் ஒரே நிகழ்ச்சிகளுடன்தான்) விழா மண்டபத்தின் வாசலில் இருந்து மேள தாளங்கள், மாலை, சுற்றிவர அபிமானிகள், பாதுகாவலர்கள் எனக் கோலாகலமாக வைரமுத்து அழைத்துவரப்பட்டார்.

தமிழக 3ம் தர அரசியல்வாதியை அப்பட்டமாகப் பிரதிபண்ணிய வைரமுத்து குழந்தைகளுக்கு குனிந்து கை அசைத்தும், இரண்டு கைகளை உயர்த்தி வணக்கம் சொல்லியும் ஆரவாரமாக உள்ளே நுழைந்தார்.

விழிக்கும் போது வேறு "மாண்பு மிகு"வும் "மேன்மை தங்கிய"வும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என வைரமுத்து ஏகமாய்க் குளிர வைக்கப்பட, முதலில் பேச வந்த கனேடிய தமிழ் விளம்பரத் தொகுப்புக்களின் மா.ஃபியாத் தலைவர் எஸ். திருச்செல்வம் "அவரை பெயர் சொல்லிக் கூப்பிடவே கூசுகிறது" என்ற வகையில் மானத்தை குழி தோண்டாமலே புதைத்தார்.

இவ்வகையில் இத்தியாதி புலம் பல்கள்கனடாவிற்கேஉரிய"எனது முதுகை நானே சொறிதல்" போன்றவை நடந்து முடிய "சின்னச் சின்ன ஆசை" கவியரங்கு ஆரம்பமாயிற்று.

கவியரங்கில் கவிஞர்களை அறிமுகம் செய்த உதயன் தொகுப்பாளர் லோகேந்திரலிங்கம்: சக்கரவர்த்தி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்றும், மட்டக்களப்பில் இருந்து யாராவது இடம்பெற வேண்டும் என்பதாலேயே இவரை அழைத்தோம் எனவும் தனது அறிவு முதிர்ச்சியைக் காண்பித்துக் கொண்டார். எப்போதோ தான் எழுதிய கவிதை ஒன்றுக்கு புதுச்சாயம் பூசி உலவவிட்ட வைரமுத்து இடையிடையே "தமிழுணர்வு" பொங்கிவர உதிர்த்த முத்துக்கள் சில...

**1. ஈழத் தமிழரின் வீரப் போராட்டத்தைக் காவியமாக்குவேன்.**

"டோன்ற் வொறி அநேகமாய் டேக் இற் ஈஸி ஊர்வசி ஸ்ரைலில் ஒரு காவியம் மேக் ஆகலாம்"

**2. அதையும் வன்னியில் போய் வாழ்ந்துவிட்டே காவியமாக்குவேன்.**

"வன்னியில் எங்காவது தாஜ், கன்னிமாரா அல்லது ஹில்டன் ஹோட்டல்கள் இருந்தால் வைரமுத்துவிற்கு வழிகாட்டுங்களேன் ப்ளீஸ்" (வன்னியில் வாழப் போவதாகக் கூறும் வைரமுத்து விமானத்தில் முதலாம் வகுப்பு ஆசனம் இல்லையானால் கனடாவுக்கு வருவது கடினம் என்ற வகையில் பேரம் பேசியதாகத் தகவல்)

**3. அக்காவியத்தை கனடாவிற்கு எடுத்து வந்து இங்கேயே அரங்கேற்றுவேன்.**

"இன்னுமொரு 10,000 அமெரிக்க டொலர்களுக்கு வருமானம் தயார்"

**4. 21ம் நூற்றாண்டில் தமிழனின் முகவரியை எழுதப் போவது ஈழத்தமிழனே...**

"அதைத் தானேயையா ஏற்கனவே சுவிஸிலிருந்து கனடா வரை ஒவ்வொருவரும் முகவரி, முகவரியாக எழுதித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்."

அடுத்துக் கவிபாட கவிஞர் கந்தவனம் வந்தார். அவர் பாவம்! என்ன சொன்னார் என்பதே பலருக்கு, ஏன் அவருக்கே புரியவில்லை. வயகரா, விஜய், ஐஸ்வரியா என்ற வகையில் கந்தவனம் பாட, "மாஸ்ரர் பெரிய மனுஷன். கவிதை சொல்லேக்க எங்கையாவது கை தட்டாட்டி என்ன நினைப்பார்" என்ற வகையில் சிலர் கைதட்டி முடித்தார்கள்.

அடுத்ததாக சக்கரவர்த்தியின் கவிதை. இன்றைய இருத்தலையும், யுத்தத்தின் யாதார்த்தத்தையும் சுட்டிய இது போன்றதொரு கவிதைக்குதிரு. வைரமுத்து அவர்கள் 20 வருடங்கள் பின் நிற்பதாகவே பட்டது. அது முக்கியமாக ஐந்து விடயங்களை சாடி நின்றது.

1. வடக்கிலும் கிழக்கிலும் இருந்த தமது ஒவ்வொரு உறவினரையும் பத்திரமாக மேற்கு நாடுகளுக்கு அழைத்துவிட்டதன் பின் பியர் போத்தல்களுடன் தமிழுணர்வு மெத்தி "பொறுத்தது போதும் எடடா வாளை" என்று போர்ப்பரணி பாடும் பரணிக் கவிஞர்கள்.

2. கேள்விப்படாத நாடுகளில் தெரியாத மொழிகளைப் படித்து, புரியாத நடைமுறைகளுடன் வாழும் போது தெரிந்த இரண்டு இனங்கள், சொந்த நாட்டில் வாழ முடியாமல் போனமை.

3. வடக்கிலிருந்து புலிகளால் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமை.

4. எமது மதங்களிலும், இலக்கியங்களிலும் பரவிக் கிடக்கும் வன்முறைக் கலாசாரம்.

5. பாலகர்கள் யுத்தத்தில் பயன்படுத்தப்படல்.

கவியரங்கில் அதிக வரவேற்பைப் பெற்ற இக்கவிதைக்கு பலர் புரியாமல் கைதட்டி முடித்தார்கள் என்பதே உண்மை. கவிதையில் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு அரங்கமே உறைந்துபோய் அமைதி காத்தது. எவராலும் உதட்டளவில் மறுக்கப்பட்டாலும் உள்ளத்தில் யுத்தத்தை கேள்விக்குள்ளாக்கியது கவிதை.

**"தண்ணீர் தேசத்தை
மட்டும் கவி பாடிவிட்டு
எங்கள் கண்ணீர்
தேசத்தை கைகழுவி
விட்ட வைரமுத்து ஐயா
அவர்களுக்கும்...."**

எனத் தொடங்கிய கவிதை பரணிக் கவிஞர்களைப் பார்த்து இப்படித் தொடர்ந்தது.

**"போரின் பகைப்புலம் அறியாது
போர்ப் பரணி பாடும்
பாட்டுக்காரர்கள்
எவரோ - அவரே என் தேசம்
இன்னமும்
எரிந்து கொண்டிருக்க
முதற் காரணி என்பேன்"**

**"பாலகனின் ரத்தத்தில் தாகம்
தணிக்கும் என் தமிழன்னையே
நீ தாய் என்பதில் எனக்குச்
சந்தேகம் வந்துவிட்டது"**

இவ்வாறு தொடர்ந்த கவிதையில் -

**"......
87இல் என் சகோதரியை
துரத்தித் துரத்தி
முலை கடித்த
இந்தியன் இன்று என்
எதிர் வீட்டுக்காரன்.
எதிரி எனப்பட்டவன்
எதிரே இருந்தும்
அவனை நாம்
புன்முறுவலுடன்
வரவேற்கவில்லையா"**



## முயலாய் பிறந்த சாபம்

என்ன, முயலும் நாய்களும் ரேஸ் ஓடுகின்றன என்று பார்க்கிறீர்களா? இல்லை....! "மரண ஓட்டம்", 'உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட்டம்' என்றெல்லாம் கூறுவோமே இதுதான் அது. உற்றுப் பாருங்கள் சுற்றிவர இன்னும் சில கொடிய மிருகங்கள் சுற்றியிருந்து இதைப் பார்த்து ரசிப்பது தெரியும். வேறு யாருமல்ல மனிதர்கள்தான் அது.

இங்கிலாந்தில் வருடா வருடம் நடைபெறும் "வோட்டர் லூ கப்" (Water loo Cup) ற்கான Hare Coursing என்னும் போட்டிதான் இது. திறம்பட பழக்கப்பட்ட வேட்டை நாய்களைக் கொண்டு அப்பாவி முயல்களை ஓடவிட்டு பிடிக்கச் செய்வார்கள். நாய்களின் கழுத்தில் வர்ணப் பட்டிகள் கட்டப்பட்டிருப்பது யாரின் நாய் முதலில் பிடிக்கிறது என்பதை ரசிகர்கள் கண்டு குதூகலிக்க.

இது கடந்த பெப்ரவரி மாதம் 23ம் திகதி லண்டனில் நடைபெற்ற 153வது வோட்டர் லூ கப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள். மிருகங்களின் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம் இம் மைதானத்திற்கு வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்தது. ஆனால் குரூர ரசனை கொண்ட மனித மிருகங்களின் முன்னால் அது எடுபடவில்லை.

154வது பந்தயமும் நடக்கலாம்........!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என சக்கரவர்த்தி வைரமுத்துவைப் பார்த்துக் கூற வைரமுத்துவிற்கே சிரமமாய்ப் போயிற்று. அரங்கமோ கரலொலியால் பிதுங்க, அமைப்பாளர் முகத்தில் (ஈ இல்லாதபடியால்) காற்றே ஆடவில்லை.

கவிதைக்கு விசித்திரமாய் பதிலளித்த வைரமுத்து "மனிதா சிங்களத்தின் சிறைக்குள் இருந்து வெளியேறிய நீ விரக்தியின் விளிம்பிலிருந்து இன்னும் வெளிவரவில்லை. இது விரக்தியின் வெளிப்பாடு... மனிதா பள்ளத்தாக்குகளில் பள்ளம் தோண்டாதே. சிகரங்களில் கூடு கட்டு" என்ற வகையில் ஏதோ கூறினார்.

விரக்திக்கும் இக்கவிதைக்கும் என்ன தொடர்பு.... மூச்!

இதைத் தொடர்ந்து பாட வந்த கவிஞர் சிவா சின்னத்தம்பி சுரத்தில்லாமல் ஒரு பரணிக் கவிதையைப் பாட எந்த வரவேற்பும் கிடைக்காமல் போயிற்று.

சுமதி ரூபனின் கவிதை அருமையானது. புத்தகங்களுக்குப் பொருத்தமாய் இருந்திருக்கலாம். சொல்லப்பட்ட முறையிலோ என்னவோ கவியரங்கில் சோபிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து வைரமுத்துவுக்கு கனடாவின் பிரபலமான ஐந்து வணிக நிறுவனங்கள் தங்கப் பதக்கம் சூட்டி மகிழ்ந்தன.

பதக்கங்களுடன் ஒலிவாங்கிக்கு முன் வந்த வைரமுத்து "இந்தத் தங்கத்தை நான் மதிக்கிறேன். ஆனால் இதை விடவும் ஈழத்தில் போராளிகளின் கையிலுள்ள இரும்பை இன்னமும் மதிக்கிறேன். இங்கே ஒரு மனிதனாய் இருப்பதைவிட ஈழத்திலே ஒரு கல்லறையாய் இருக்கவே விரும்புகிறேன்" என்றவாறு தன் ஈழ அபிமானத்தைப் பிரகடனம் செய்ததுடன் பதக்கங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழககங்களுக்கு வழங்க முன்வந்தார். சிவாஜி, கமலஹாசனெல்லாம் செத்தார்கள் போங்கள்.

சக்கரவர்த்தியின் கவிதையுடன் கொஞ்சம் நொந்து போயிருந்த அமைப்பாளர்கள் வைரமுத்துவின் ஈழ அபிமானத்தைக் கண்டு மகிழ்ச்சியில் திணறியே போனார்கள்.

கனடாவின் 24 மணி நேர தமிழ் வானொலிகளில் ஒன்றான கீதவாணி, நிகழ்ச்சிகளை நேரடியாக ஒலிபரப்பியது. அவுஸ்திரேலியாவிலும் ஏதோ ஒரு வானொலியால் கொண்டு செல்லப்பட்டது.

விழாவிலே இடையிலே வந்த அறிவிப்பாளர் 'கனேடிய நகரங்களிலிருந்தும், அவுஸ்திரேலியாவிலிருந்தும் கீதவாணி வானொலிக்கு ஃபக்ஸ் வந்து குவிந்து, ஃபக்ஸ் இயந்திரமே உடைந்து, கூரையே வெடித்து....' இவ்வாறாக ஏதோ சொல்லிக் கொண்டே போனார். சுயதணிக்கைக்குப் பிரபலமான கனேடிய தொடர்பூடகங்களில் ஒன்றான கீதவாணியில் எல்லா நிகழ்ச்சிகளும் நேரடி அஞ்சல் செய்யப்பட்டும் சக்கரவர்த்தியின் கவிதை மட்டும் ஒலிபரப்பப்படவில்லை.

இக்குழுவின் நிகழ்ச்சியுடன் விழா முடிந்தது. கனடாவிலுள்ள பல வீட்டுத் தொலைபேசிகள் சிணுங்கியபடியே இரவைத் தொலைத்தன. பரலது மூளைகள் இரவிரவாகத் திட்டமிட்டன. காலையில் சக்கரவர்த்தியிடம் கவிதையை சற்றே குறைக்கும்படி கோரிக்கை விடப்பட்டதாம். மறுக்கப்படவே கவியரங்கு ரத்தானது. பலர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

மறுநாள் வைரமுத்து சற்றே பேச ஆசைப்படுகிறார் எனக் காரணம் கூறி கவியரங்கு ரத்தானதற்கு விளக்கம் தரப்பட்டது.

இனி வைரமுத்து தன்னை அழைத்தவருக்கு நன்றி சொல்ல வேண்டுமல்லவா? ஆகவே உதயன் சார்பில் அதன் ஆசிரியரும் (?) நிருவாகியும் ஆனவருக்கே பதக்கம் வழங்கப்பட்டது. (நானே என க்கு விருது வழங்கல்).

பதக்கத்தைச் சூட்ட முன்பு "இவர் ஒருகறுப்புத் தங்கம், முத்து, வைரம், வெள்ளி, பொன், உள்ளி, மிளகு..." என்று வைரமுத்து புளுகித்தள்ள உணர்ச்சிவசப்பட்ட உதயன் தொகுப்பாளர் வைரமுத்துவின் காலில் விழுந்து தன் நன்றிகளையும் அபிமானத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

இதற்குப் பின் பேசிய, கனடாவில் தமிழர்களுக்கு **வலி**காட்டியாகத் திகழும் செல்லையா செந்திலாதன், உதயனின் இந்த விழா தமிழ் வரலாற்றில் இதுவரையில் இல்லாதது எனப் பேசி, "உதயனே, கலைஞர் கருணாநிதியையும் இங்கே அழைக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்து அமர்ந்தார். (தனக்கு காலில் விழ சந்தர்ப்பம் தரவில்லை என்ற கோபமோ என்னவோ?)



விழாவிற்கு இரண்டாம் நாள் வந்தோருக்கு கவியரங்கு ரத்தானது ஏமாற்றத்தையே தந்தது.

கனேடிய தொடர்பூடகங்கள் யாவும் இந்த வேடிக்கை விநோதங்களைப் பார்த்து ஆஹா, ஓஹோ வென்றிருக்க விடுதலைப் புலிகளின் ஆதரவு ஏடான "முழக்கம்" பத்திரிகை மாத்திரம் ஈழப் போரில் சவாரி செய்யும் வைரமுத்து பற்றி விமர்சனத்துடன் கட்டுரை வரைந்தது. "வைரமுத்து கனடாவிலிருக்கும்போதே எதிர்ப்புக் குரலா" என்று அமைப்பாளர்கள் கொதித்துப் போனார்கள்.

இதுவரையில் விளம்பரங்களையே எழுதி வந்த பேனாக்களுக்கு பதிலும் எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. "நீ யார்? உனது பூர்வீகம் யாது? உனது முகத்திரையைக் கிழிக்கிறேன்" என்ற வகையில் பதில் எழுதி மகிழ்ந்து கொண்டார்கள்.

பத்திரிகை உலகில் விமர்சனம் என்பதாக ஒன்று உண்டு என்பதை மறந்து போனார்கள். உதயனும் முழக்கமும் ஒன்றையொன்று காட்டமாக சாடிக் கொண்டன.

இதனிடையே மறுவாரம் மொன்றியால் நகரில் இதே கவியரங்கு ஒழுங்கு செய்யப்பட்டு, விளம்பரங்களும் வெளிவந்திருந்தன (சக்கரவர்த்தி உட்பட). கவிதையில் குழப்பம் விளைவித்தமையால் சக்கரவர்த்தியும், ஏதோ ஒரு காரணத்தால் சுமதி ரூபனும் தவிர ஏனையோர் கலந்துகொள்ள அங்கும் கவியரங்கு மேடையேறிற்று.

இப்போது இன்னும் தன் ஈழ அபிமானத்தைக்காண்பிக்கமுனைந்த வைரமுத்து "மலரப்போகும் தமிழீழத்தின் தேசிய கீதத்தை நானே இயற்றித் தருவேன்" என்று மிகப் பெரிய நகைச்சுவை ஒன்றை உதிர்த்தார். போச்சுடா! ஏற்கனவே அதை யார் இயற்றுவது என்பதில் இருவருக்கிடையே போட்டி... இப்போது வைரமுத்துவுமா?

இங்கு வெளிவரும் விளம்பரத் தொகுப்புகள் இதை தலையில் வைத்துக் கொண்டாடி முன் பக்கத்திலேயே வெளியிட்டு மகிழ்ந்தன. யாராவது "தமிழீழத்தின் தேசிய கீதம்" என்று ஏதும் படம் எடுக்கிறார்களோ தெரியவில்லை.

எங்களுக்கெல்லாம் ஒரு வியாதி! தென்னிந்தியப் பிரபலங்கள் சொல்லுவதெல்லாவற்றையும் தலையால் கேட்டு வணங்கி அவர்களை வாழ்த்தி... ஒரு கவிதை ஞாபகம் வந்தது.

"சிகரங்களைத் தொடுவதல்ல
எங்கள் நோக்கம் - அடுத்தவன்
பாதங்களைத் தொடாதிருப்பதும்
- அவன்
வாயு பறியும் போது
ஆனந்தம் என்று அள்ளிப்
பருகாதிருப்பதுவுமே
எங்கள் பாதை"

**- நன்றி : எக்ஸில் - 7**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

**வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்**

தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**

10814


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

